ISAI INBAM

KRISHNAMURTHI (K. S)

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# இசையின்பம்

. மவத

13 JUL 1949
MADRAS

கு. சா. கிருஷ்ணமூர்த்தி, இயற்றியது

விலை ரூபாய் ஒன்னரை

தமிழகம்
புதுக்கோட்டை

இரண்டாவது வெளியீடு

## முன்னுரை

13 JUL 1949

உலகமொழிகளில் தமிழ் மிகப்பழமை வாய்ந்தது. புதிய மொழிகள் வந்து நெருக்கும் இக்காலத்திலும், அது தலைநிமிர்ந்து நிற்கிறது. காலம் செல்லச்செல்ல அதன் இளம் பொலிவு வளம் பெறுகிறது. சங்கத்தமிழ் திட்பநுட்பமா னது. கம்பத்தமிழ் அணியின்பத்தமிழ். கம்பனுக்குப்பிறகு ஆழ்வார், நாயன்மார், மணிவாசகர் முதலிய அருட்கவிகள் இயலிசைத்தமிழை வளர்த்தனர். அக்காலம் தனித்தமிழ்ப் பண்கள் முழங்கின. பிறகு தமிழ்ப்பண்கள் தற்காலம் வழங் கும் பெயர்களைத்தாங்கின. அருணாசலக் கவிராயர், வேத நாயகம்பிள்ளை, கோபால கிருஷ்ணபாரதியார், கவிக்குஞ்சர பாரதியார், சுப்புராமையர், முதலியோர் இசைத்தமிழுக்குப் புத்துயிரளித்தனர், தாயுமானாரும், அருட்பிரகாச வள்ளலா ரும் தமிழில் தெய்வ ஒளி பாய்ச்சினர், தமிழ் புதுமை பெறு றது.

எனினும் இசையரங்குகளில் தெலுங்குப்பாடல்களே பெரிதும் முழங்கின. தமிழில் இசைப்பாடல்கள் இருந்தும் பாடுவாரும் தேடுவாருமின்றி அவை ஒலியொடுங்கின. இசையிலக்கணத்துடன் தமிழில் பாடவராது என்ற மயக்க மும் சிலர் மனத்தைப்பற்றிக் கொண்டிருந்தது.

தமிழ் மறுமலர்ச்சிபெற்று வீறுடன் எழுந்தது. அத் துடன் தமிழிசை இயக்கமும் வெற்றிமுரசு கொட்டி யெழு ந்தது. அதை எதிர்க்கும் குரல்கள் ஏங்கி அடங்கின. தமிழிசையியக்கத்தின் பயனாக ஆயிரக்கணக்கான பழம் பாடல்கள் அரங்கேறின! தமிழ்ப்பழமையுடன் வற்றிப்போ கும் மொழியன்று. அது மேன்மேலும் புதிய இன்பங்களு டன் பொலியும் தெய்வமொழி. தமிழில் இன்று புதுப்புது பாமலர்களும், இசைமலர்களும், பூத்துச் சொரிகின்றன. தமிழிசையியக்கத்தின் பயனாகப் பல இசை நூல்கள் வெளி வருகின்றன.

அவற்றுள் திரு. கு. சா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இயற்றிய ''இசையின்பம்'' ஒன்றாகும். இந்நூல் பல மேள ஜன்ய' அபூர்வ ராகங்களில் அமைந்துள்ளது. தமிழ் நிக ற்றமொழி; தமிழிசை பேரின்பம் தருவது; அதைவளர்க்க வேண்டும்; மனிதவாழ்வு இறைவனுக்கு நிவேதனமாக வே ண்டும்; சிவன், முருகன், சக்தி, ஆகிய இறைவடிவங்கள் நம க்கு அறம்பொருள் இன்பப் பயன்களைத்தரும் என்பது இந்நூலின் கருத்தாகும்.

இசையின்பப் பாடல்களைப்படித்து மிக்க மகிழ்ச்சி யடைந்தேன்.

அரவிந்தாச்ரமம்
புதுச்சேரி

சுத்தானந்த பாரதியார்

# அட்டவணை



| எண் | பாடல் | ராகம் | தாளம் |
|---|---|---|---|
| 1 | உலகமெல்லாம் | கம்பீர நாட்டை | ஆதி |
| 2 | தமிழ்க்கலையாவும் | ஆரபி | ,, |
| 3 | இன்பத்தமிழ் | வலஜி | ,, |
| 4 | இசையினில் | மணிரங்கு | ,, |
| 5 | அமுதுண்டிடவாரீர் | வசந்தா | ,, |
| 6 | தலைவணங்கிடுவாய் | பியாக்கடை | ,, |
| 7 | வந்தனள் எந்தன் | கல்யாணி | ,, |
| 8 | கானமே மனதின் | காப்பி | ,, |
| 9 | வந்தனைக்குரிய | கானடா | ,, |
| 10 | விழித்தெழுவாய் | மலையமாருதம் | ,, |
| 11 | தமிழ் தமிழ் தமிழ் | சிந்துபைரவி | ,, |
| 12 | வாழ்வின் இன்ப | உதயரவிச்சந்திரிகா | ,, |
| 13 | இதுநாள்வரை | இந்துஸ்தான் பியாக் | ,, |
| 14 | பெருமைகொள்வாய் | சூரிய காந்தம் | ,, |
| 15 | காதல் கொண்டேன் | ரதிபதிப்பிரியா | ,, |
| 16 | அள்ளி உண்டிடலாம் | பந்துவராளி | ,, |
| 17 | தமிழுக்கு நிகரான | ஹேமவதி | ரூபகம் |
| 18 | இந்த நாடுதான் | கௌரிமனோஹரி | ஜம்பை |
| 19 | தமிழின் உயர்வுக்காக | பைரவி | திருபுடை |
| 20 | பாடினாள் ஓர் தமிழ் | சக்ரவாரம் | ஆதி |
| 21 | கொள்ளை கொள்ளு [தடி | ராகமாலிகை | ரூபகம் |
| 22 | அமுதத் தமிழுக்கு | கீர்வாணி | ஆதி |
| 23 | தோன்றுதுபார் [தமிழா | ஆனந்த பைரவி | திருபுடை |
| 24 | என் தாய்மொழிக்கு | யமுனா கல்யாணி | மிஸ்ர ஏகம் |
| 25 | எங்கும் முழங்குது | காப்பி | ஆதி |
| 26 | முரசொலி முழங்குது | பிலகரி | ,, |
| 27 | நீயறியாயோ | தேஷ் | ஆதி |
| 28 | சிந்தனை செய்தனையா | ரீதிகௌளை | மிஸ்ர ஏகம் |
| 29 | எட்டுத் திசைகளிலும் | சாமா | ஆதி |
| 30 | நெஞ்சம் பதைக்க | புன்னாகவராளி | ,, |
| 31 | ஆருக்கும் அடிமை | பியாக்கு | ஆதி |
| 32 | சங்கே நீ முழங்கு | சிம்மேந்திர மத்திமம் | ரூபகம் |
| 33 | கல்விச் செல்வத்தின் | அடாணா | ஆதி |
| 34 | எல்லாம் இங்கே | கேதாரம் | ,, |
| 35 | ஆணவம்கொண்டு | தேசிகதோடி | ,, |
| 36 | மதம் மதம் என | கல்யாணி | ,, |

| எண் | பாடல் | ராகம் | தாளம் |
|---|---|---|---|
| 37 | சிந்தையை | செஞ்சுருட்டி | மிஸ்ரஏக |
| 38 | இச்சகம்பேசி | தன்யாசி | ஆதி |
| 39 | பயமெனும்பேய் | அடாணா | ஆதி |
| 40 | பிறர் துன்பம் | ஸ்ரீ ரஞ்சனி | ,, |
| 41 | அன்னை நினைதெழி [வின் | ஜோன்புரி | ,, |
| 42 | எவரே விருப்பமில் [லார் | கரகரப்பிரியா | ,, |
| 43 | காணக்காண | அமீர்க்கல்யாணி | ,, |
| 44 | எங்கும் இயற்கை | பூரிக்கல்யாணி | ரூபகம் |
| 45 | அன்னையைப்போல் | நாதநாமக்கிரியை | திருபுடை |
| 46 | காரிருள் அகற்றும் | நாட்டக்குறிஞ்சி | ரூபகம் |
| 47 | கனநாதனே | நவரசக்கன்னடா | ஆதி |
| 48 | வரம்அருள்வாய் [நீயே | சங்கராபரணம் | ,, |
| 49 | இன்ப வாழ்வுநான் | சிம்மேந்திரமத்திமம் | ,, |
| 50 | தில்லையிலே நடன [மாடினர் | மோகனம் | கண்ட ஜாதி அ [தாள |
| 51 | உன்னைவேண்டி [னேன் | சரஸ்வதி | ஆதி |
| 52 | ஒருமுறையேனும் | சாவேரி | ஆதி |
| 53 | எண்ணம் ஈடேற | கௌரி மனோஹரி | ,, |
| 54 | கடைக்கண்ணால் பார் | சக்ரவாகம் | திருபுடை |
| 55 | உன்திருவருள் | இந்தோளம் | ஆதி |
| 56 | பரம்பொருளின் | மோகனம் | ,, |
| 57 | மனமறிந்தோர் | ரதிபதிப்பிரியா | ,, |
| 58 | எப்பொழுதோ | மத்திமாவதி | ,, |
| 59 | தினமும் உன் திருவடி | அம்சாநந்தி | ,, |
| 60 | பிறவாதிருக்கவரம் | சங்கராபரணம் | ,, |
| 61 | தினமொருகனம் | வாகீஸ்வரி | ரூபகம் |
| 62 | நீமதியிழந்து | ஆனந்தபைரவி | ஆதி |
| 63 | திக்திக்கும் ஞான | இத்துஸ்தான்பியாக் | ,, |
| 64 | தெய்வத் திருவருள் | நீலாம்புரி | ரூபகம் |
| 65 | ஆடியவர் | தன்யாசி | ஆதி |
| 66 | கண்டதுண்டோடி | பைரவி | ,, |
| 67 | வேண்டாமடி | நாட்டை | ஆதி |

| எண் | பாடல் | ராகம் | தாளம் |
|---|---|---|---|
| 68 | இவனேயோ நீமண | சாரங்கா | ஆதி |
| 69 | சிந்தைகவர்ந்ததிரு | சாருகேசி | திருபுடை |
| 70 | எல்லாம் தெரிந்தும் | உசேனி | ஜம்பை |
| 71 | நாளில்வருவாரோடி | ஜோன்புரி | ஆதி |
| 72 | இன்பக்கனு ஒன்று | ராகமாலிகை | ,, |
| 73 | மயிலே அவர்பால் | தேஷ் | திஸ்ரஏகம் |
| 74 | இரவும் பகலும் | கல்யாணி | ஜம்பை |
| 75 | ஓம் சுத்த சக்தி | கரகரப்பிரியா | சதுர்ஸ்ர ஜாதி அட [தாளம் |
| 76 | நீயருள் புரிவாயே | வசந்தபைரவி | ஆதி |
| 77 | தயை நீ செய்வாய் | கேதாரகௌளம் | ,, |
| 78 | ஆதரவேதும் | சிந்துபைரவி | ,, |
| 79 | ராமலிங்கம் ஜோதி | மனோலயம் | ,, |
| 80 | பெற்றேன் பெற்றேன் | ஆபோகி | ,, |
| 81 | அழியும் வாழ்க்கை | வராளி | ,, |
| 82 | திருவருட் செயல் | சண்முகப்பிரியா | ,, |
| 83 | குமரன் குகன் | பிரதாபவராளி | ,, |
| 84 | அருளே புரிவாய் | சரஸ்வதி | ரூபகம் |
| 85 | அருள் புரிந்திடவா | பைரவி | ,, |
| 86 | வந்தருள்குகா | சரஸ்திமனோகரி | ஆதி |
| 87 | உன்னை நம்பினேனே | ஹேமாவதி | ஆதி |
| 88 | குமாரகுருபரன் | கல்யாணி | ,, |
| 89 | வரவேணும் | காப்பி | ஜம்பை |
| 90 | திருமாமயிலின் | தர்பார் | ஆதி |
| 91 | எல்லா நலனும்தர | தோடி | ,, |
| 92 | கிருபை நீர்செய்ய | ஜெயந்தவி | ,, |
| 93 | சரவணபவகுகனே | இந்துஸ்தான்பியாக் | ,, |
| 94 | மாமயிலா முருகா | சாமா | ஆதி |
| 95 | மனக்குறை | உமாபரணம் | ,, |
| 96 | கந்தா உந்தன் | தன்யாசி | ரூபகம் |
| 97 | வினையாவையும் | கமாஸ் | ஆதி |
| 98 | ஆடும்மயில்மேல் | ராகமாலிகை | ,, |
| 99 | கருணாகர | அரிகாம்போதி | ,, |
| 00 | நானே உனை | காம்போதி | திருபுடை |
| 01 | காணவாருமே | தோடி | ரூபகம் |
| 02 | வாழ்க வாழ்க | சக்ரவாகம் | ஆதி |

13 JUL 19..
MADRAS

# என்னுரை

உலகத்தின் தலைசிறந்த கலை இசைக்கலை. தமிழ் என்றைக்குத்தோன்றியதென்று வரையறுத்துக்கூற முடியாது. அப்படியே தமிழிசையுண்டான காலத்தையும் கணக்கிட்டுக்கூற இயலவில்லை.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்நாட்டில் இசைக்கலை அதி உன்னத நிலையில் இருந்ததென்பதும் எண்ணற்றத் தமிழ்ப் புலவர்களால் பல்வேறு விதத் தமிழ்ப் பண்கள் இயற்றப்பட்டு அவ்வப்போது அரங்கேற்றப்பட்டதென்பதும் பண்டைய நூல்களின் வாயலாக அறியக்கிடக்கின்றது.

அன்றுமுதல் இன்றுவரை அகில மொழிகள் அனைத்திற்கும் ஆதியாய் நின்று, அழகும் இளமையும் பொலிய அருளாட்சி புரிகின்றாள் தமிழன்னை.

தமிழின்பால், தமிழிசையின்பால் எனக்குள்ள ஆர்வம் காரணமாக அவ்வப்போது இயற்றிய பாடல்களைத் தொகுத்து வெளியிடும்படி இசைப்புலமைமிக்க அன்பர்கள் பலர் வேண்டிக்கொண்டதற்கிணங்கத் "தமிழக"த்தின் இரண்டாவது வெளியீடாக "இசையின்ப"த்தைத் தமிழகத்திற்களிக்கின்றேன் தமிழகம் யேற்றுக்கொள்ளுமென்றும் நம்புகின்றேன்.

அருந்தமிழ்த் தொண்டாற்றும் அலுவல்கள் பலவற்றிற்கிடையே இந்நூலைச் சரிபார்த்து முகவுரையும் வரைந்தளித்த உயர் திரு. சுத்தானந்த பாரதியாரவர்களுக்கு என் நன்றி.


தமிழ் வாழ்க!

தமிழிசை வாழ்க!!

புதுக்கோட்டை
1—8—46

கு. சா. கிருஷ்ணமூர்த்தி
"தமிழகம்"

கம்பீர நாட்டை



13 JUL 1949
MADRAS

உனக்கே என் வணக்கம்

பல்லவி

உலக மெல்லாம் வாழக்
கீழ்த்திசை தன்னில் தினம்
உதித்திடும் ஒளிச் சுடரே
உனக்கே என் வணக்கம் (உலகம்)

அனுபல்லவி

நலங்களெல்லாம் செய்யும்
நாயகன் உன்னையே
நான் தொழுவேன் உயர்
வானின் றருள் சுரந்து (உலகம்)

சரணம்

அண்ட சரா சரம்
யாவும் உண்டாக்கினாய்
ஆருயிர் வளர்க்கும் நல்
அமுதமும் ஆனாய் - கண்
கண்ட தெய்வம் இந்த
உலகில் உன் போல் வேறு
கண்டறியேன் இன்பக்
கதிர்மா மணியே (உலகம்)

## அருள்வேண்டும்

ராகம்　　　( 2 )　　　தாளம்

பல்லவி

தமிழ்க்கலையாவும் தழைத்தினிதோங்கக்
தன்னிகரில்லா நின்னருள்வேண்டும்　　　(தமிழ்)

அனுபல்லவி

சமத்துவஞானசன் மார்க்கசொரூபா
சகலஉயிரையும்காத் தளிக்கும்பிரதாபா　　　(தமிழ்)

சரணம்

கலைவடிவாய்ஒரு காலைத்தூக்கித்தில்லைக்
கனகசபைதனிலே கருணைதவழும்எழில்
சிலைவடிவாய்நின்று அடியவர்க்கெல்லாம்
சேவைதந்திடும்திருத் தேவாதிதேவா　　　(தமிழ்)

வலஜி

## தமிழ்க்கில்லை ஈடு

( 3 )

பல்லவி

இன்பத்தமிழினிலே இன்னிசைபாடி ழி

என்றும்மகிழ்ந்திடுவோம் ஒன்றுகூடி (இன்ப)

அனுபல்லவி

அன்பர்களே நமக்குத் தமிழிசைபோலே

ஆனந்தம்தருவதுண்டோ புவிமேலே (இன்ப)

சரணம்

முன்னர் இந்நாட்டு

மன்னர்களோடு

மூதறிவாளரும்

ஆதரவோடு

தன்னுயிரினும்மிக்கத்

தமிழை அன்போடு

தழுவியதால் இன்றும்

தமிழ்க்கில்லைஈடு (இன்ப)

மணிரங்கு ( 4 ) ஆதி

பல்லவி

இசையினில் நான் கண்ட இன்ப மதற்கு இணை
இவ்வுலகினில் இல்லையே செழுந்தமிழ் (இசை)

அனுபல்லவி

பசுங்கிளி இனமும் விலங்கினமும் தன்
வசமிழந்தே உள்ளம் பரவசம் கொள்ளும் தமிழ்
(இசை)

சரணம்

எதுகையோடு நல்ல மோனையும் எழில் சேர்
இனிய பொருள் சொரியும் எளிய தமிழிற்பண்ணைச்
சுதியுடன் இணைந்தே லயத்துணை யோடு
சொல் வழுவில்லாமல் சொல்லும் செழுந்தமிழ்
(இசை)

## அமுதுண்டிட வாரீர்

வசந்தா ( 5 ) ஆதி

### பல்லவி

அமுதுண்டிடவாரீர் செந்தமிழ்
அன்பன்களே நீவீர் யாவரும் இங்கே (அமுது)

### அனு பல்லவி

இமயமுதல் தென் குமரிவரை எங்கும்
அமையும் வீரமிகும் தமிழர்களே கலை (அமுது)

### சரணம்

கமழும் எழில் மிகுங்
கவிமலர்ப்பெருக்கும்
கற்பனைக் கடலெனுங்
காவியச் செருக்கும்
சமய நூல்களோடறச்
சாத்திரம் விரிக்கும்
சங்கநூல் பலவும் நம்
அறிவையும் வளர்க்கும் (அமுது)

தமிழ்க்கொடி வணக்கம்

பியாக்கடை ( 6 ) ஆதி

பல்லவி

தலைவணங்கிடுவாய்த் தமிழா செந்
தமிழ்க்கொடிவானுயர்ந்து பறக்குதுபார் அதற்குத்
(தலை)

அனு பல்லவி

மலைவிளக்காய்மாநில மக்களுக்கெல்லாம்உயர்க்
கலைவிளக்கம்செய்யும் கன்னித்தமிழ்க்கொடிக்கே
(தலை)

சரணம்

சிலையும்புலியும்மீனும் சித்தரித்தேஇமயச்
சிகரமீதில்நெடுஞ் சேரவீரனிந்த
உலகமெல்லாம்வியக்க உயர்த்தியதாம்திரு
உயர்தனிச்சிறப்பெல்லாமுடைய தமிழ்க்கொடிக்கே
(தலைவணங்கிடுவாய்)

கல்யாணி ( 7 ) ஆதி

பல்லவி

வந்தனள் எந்தன் செந்தமிழ்க்காதலி
சிந்தனை உலகினிலே ஒருநாள் (வந்த)

அனுபல்லவி

அந்தரம்வாழும் மடந்தையர்போலே
அருள்தவழும்விழிகளோடென்முன்னலே (வந்த)

சரணங்கள்

சிந்தாமணியிழை சிரத்தினிலாட
செவிகளில்குண்டல கேசிகளாட
செந்தாமரைவாய்த் திருக்குறள்பாட
செந்தளிர்கரத்தில் வளையாபதியாட (வந்த)

இந்துவைநிகர்த்திடும் எழில்முகங்காட்டி
இனியசெந்தேன்தமிழ் இசையமுதூட்டி
செந்திருமேனியில் மணிமேகலைபூட்டி
சிலம்பணிபுனைந்திடும் செல்வச்சீமாட்டி. (வந்த)

## களிப்புண்டாக்கும் கானம்

காப்பி ( 8 ) ஆதி

பல்லவி

கானமே மனதின் கவலையெல்லாம் போக்கிக்
களிப்புண்டாக்கும் உலகில் இன்ப (கான)

அநு பல்லவி

ஞானமில்லாத ஓர் ஜீவனில்லை எனமுன்
ஞால மறியக்கண்ணன் தானிசைத்தான் வேணு
(கான)

சரணம்

வானவரும் புவி மாந்தரும் குழவியும்
வளர்முகிலும் ஊர்வன தாவரமும் கல்லும்
கானகம் வாழ்ந்திடும் விலங்குகளும் மற்றும்
ககனத்தே சென்றிடும் பறவைகளும் விரும்பும்
(கானமே)

கர்நாடா (9) ரூபு

பல்லவி

வந்தனைக்குரிய செந்தமிழ்த்தாயே என்
வாழ்க்கையின் நலங்களை வகுப்பவள் நீயே (வந்தனை)

அனுபல்லவி

சிந்தனையெல்லாம் நிறைந் திருப்பவள் நீயே நாடு
செழித்திடத் திருவருள் செய்திடுவாயே (வந்தனை)

சரணங்கள்

அந்தநாளிலே அருந்தமிழ் நாட்டார்
அவனியெல்லாம் புகழ வாழ்ந்தனரன்றோ
இந்த நாளிலே பிறர் எமைக்கண்டு
இழிவதெனில் உனக்கும் இழிவாருமன்றோ (வந்தனை)
உன்பெருமை தனை மறந்த தன்பயனை
உணர்ந்துகொண்டோம் மனத் துணிவுகொண்டோம்-எம்
பொன் பொருள் உடல் உயிர் யாவுமுன்னுடையதே
புது நிலவே எழிலே கலைக்கடலே (வந்தனை)

வெற்றி காண விழித்தெழு

மலையமாருதம் ( 10 ) ஆதி

பல்லவி

விழித்தெழுவாய்த்தமிழா நீயின்றே
வெற்றியும்தோல்வியும் வீரனுக்கொன்றே (விழி)

அனுபல்லவி

செழித்திடும்வளங்கள்சேர் செந்தமிழ்நாட்டார்
சிறுமையுற்றாரென்றால் சிரிப்பாரேகேட்டார் (விழி)

சரணங்கள்

கழித்தவுன் நாளெல்லாம் கனவெனத்தள்ளு
காரியம்கொள்வதே கருத்தெனக்கொள்ளு
பழிப்பும்ஏச்சும்முன்னேற்றப் பாதையின்முள்ளு
பகைவர்கள்சூழ்ச்சியைமெய்ப் பறைசாற்றிவிள்ளு (விழி)

வடஇமயம்முதல் குமரிமுனைவரை
வாழ்ந்தனர்தமிழர்தம் புயவலியாலே
கடலையும்கடந்து போர்த்திறம்காட்டிமுன்
கண்டவெற்றியின்பத்தைக் கண்டிடுவோம்
நாமும் (விழி)

## தமிழ்ச் சிறப்பு

சிந்து பைரவி (11) ஆதி

பல்லவி

தமிழ்தமிழ்தமிழென்றுசொலலு தமிழாசெந்
தமிழ்முழக்கம்செய்து உலகையெல்லாம்வெல்லு
(தமிழ்)

அனுபல்லவி

தமிழ்தமிழ்தமிழென்றுசொன்னால் அதற்குள்
அமிழ்தமிழ்தமிழ்தேனெனும் ஒலியெழக்காண்பாய்நீ
(தமிழ்)

சரணங்கள்

வான்மறைகண்டதுதமிழே - கலை
வளங்கள்நிறைந்ததுதமிழே - நறுந்
தேனென இனிப்பதும் - தமிழே - நமது
செல்வத்திலெல்லாம்தலைத்தமிழே—அதனால் (தமிழ்)

தன்உமிழ்நீரற்றால்வீழ்வோம் - அதுபோல்
தமிழ்சிதைந்தால்தமிழர்த்தாழ்வோம் - நமது
இன்னுயிர்த்தந்தேனும்காப்போம் - தமிழ்
ஏற்றத்திற்கென்றேநாம் - இனிஉயிர்வாழ்வோம்
(தமிழ்)

உலகின்முதன்மொழிதமிழே - சங்கம்
ஓம்பிவளர்த்ததிருத்தமிழே - இங்கு
நிலவும்ஐம்பெரும்காப்பியங்கள் - எல்லாம்
நிகழ்த்தியதும்நமது - நிகரற்றதமிழே (தமிழ்)

நய ரவிச்சந்திரிகா ( 12) ஆதி

பல்லவி

வாழ்வின் இன்ப ஒளிச்சுடரே நறு
மாமணம் கமழ்ப் புது மலரே - எந்தன் (வா)

அனுபல்லவி

தாழ்வகற்றிடும் செந்தமிழே இந்தத்
தாரணியெல்லாம் தழைகநின் புகழே (வா)

சரணங்கள்

செழித்திடும் பயிர்க்குவான் வழங்கும் நன்மழையே
செயல்திறம் நல்கிடும் சிந்தனை விழைவே
விழிக்குள்ளே பாவையாய் விளங்கிடுவாயே
வெற்றியெல்லாம் நீயே நற்றமிழ்த்தாயே - என்
(வாழ்)

உடலில் இயங்கிடும் உயிரும் நீயே
உண்மையின் உருவமும் உயர்வும் நீயே
கடல்அலையெழுப்பும் இன்னொலியும் நீயே
காற்றின் அசைவில் எழும் இசையும் நீயே - என்
(வாழ்)

## இதுநாள் மறந்திருந்தோமே

இந்துஸ்தான் பியாக் ( 13 ) ஆதி

### பல்லவி

இது நாள் மறந்திருந்தோமே - தமிழ்
இசைக் கலையைக் கருதா திருந்தோமே (இது)

### அநு பல்லவி

இதனிலும் இன்பம் வேறுண்டோ - நமது
இனியதமிழ்மொழிக்கோர் மொழியிணையுண்டோ
புதுமையேதேனும்பிற மொழிகளில் உண்டோ
-பாட்டின்
பொருள்தெரியாதஇசையால் பயனுண்டோ
(இதுநாள்)

### சரணம்

அப்பர்சுந்தரரும் மாணிக்கவாசகரும்
அருள்ஜோதிவள்ளலாரும் தாயுமானவரும்
ஒப்பிலாதத்திரு நாவுக்கு அரசரும்
உள்ளம்கனிந்துவந்து ஓதியதமிழைநாம்
(இது)

## பெருமைகொள் தமிழா

ஸூரியகாந்தம் (14) ஆதி

பல்லவி

பெருமைகொள்வாய்த்தமிழா - தமிழ்நாட்டில்
பிறந்ததனுல்மிகச் சிறந்தவன்னுனென்று (பெருமை)

அனு பல்லவி

அருமைமிகும்தமிழ் அமுதமொழியுனதே
ஆதலினுல்இந்தப் பூதலமீதுநீ (பெருமை)

சரணங்கள்

சிற்பக்கலைகளிலே சிறந்ததுன்னுடு
சித்திரக்கலைத்திறம் செழித்ததுன்னுடு
கற்பனைக்காவியம் கவிதைகளென்னும்உயர்க்
கலையின்நலங்களெல்லாம் கண்டதுன்னுடு
(பெருமை)

ஆற்றுநீர்வளங்கள் அமைந்ததுன்னுடு
அமுதக்கனிச்சோலைகள் நிறைந்ததுன்னுடு
மாற்றுயர்பொன் நவ மணிவிளையும்நாடு
மலைவளம்பயிர்வளம் மலிந்ததுன்னுடு (பெருமை)

முப்பெரும்தமிழ்மன்னர் இப்புவியெல்லாம்
முறைதவராதரசு செலுத்தியதுன்னுடு
ஒப்பரும்புலவர்கள் உதித்ததுன்னுடு
ஓதவொண்ணுதுன்தமிழ் நாட்டிற்குசடு (பெருமை)

ரதிபதிப் பிரியா ( 15 ) ஆதி

பல்லவி

காதல்கொண்டேன் எழில் கன்னித்தமிழ்க்குமரி
காரிருள்காயும்இளம் கதிரே உன்மேல்நான் மெய்க் (காதல்)

அனு பல்லவி

பூதலம்போற்றும் மொழிகளுக்கெல்லாம்
ஆதியும்நீயே இன்ப ஆழியும்நீயேஉன்மேல் (காதல்)

சரணங்கள்

புதுப்புனலேபுனலில் பூத்ததோர்தாமரைப்
பூவேபூவின் சுவைமிகும் தேனே - என்
இதயவண்டுந்தன் மதுரத்தேன்பருகி
இன்பமனம்நுகர அன்புபெருகியதால் (காதல்)

இடர்களைந்திடும்கூர் வாளும்நீயே - என்
எண்ணமும்செயலும் வாழ்வும்நீயே
திடமளிக்கும்அறிவின் சக்தியும்நீயே
செல்வமெல்லாம்தர வந்தவள்நீயே (காதல்)

பந்துவராளி ( 16 ) ஆதி

பல்லவி

அள்ளி உண்டிடலாம் வாரீர் எல்லோரும்
தெள்ளமுதாகிய செந்தமிழ்த் தேனை (அள்ளி)

அனுபல்லவி

உள்ளமெல்லாம்கலை வெள்ளத்தால் நனைய
உவகைகொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிய
(அள்ளி)

சரணங்கள்

வள்ளுவன் மறையும் மணிமேகலையும்
வளையாபதியும் குண்டல கேசியும்
விள்ளும் தரமில்லா சிலப்பதிகாரமும்
விலைமதிப்பில்லா சிந்தா மணியும் மற்றதுமுண்டு
(அள்ளி)

கள் துளிர்க்கும் மலர்க் கவிதைகளும் கண்டோர்
கருத்தைக்கவரும் பல காவியங்களும் கலை
வெள்ளம்போல் இங்குண்டு விருப்பமுள்ளோர் வந்து
வேற்றுமையின்றி யேற்றிப் போற்றி மகிழ்ந்து
(அள்ளி)

நிகரற்றதமிழ்

ஹேமாவதி ( ) ரூபகம்

17

பல்லவி

தமிழுக்குநிக ரானதோர்மொழி
தரணிமீதுண்டோ சொல்வீர்செந் (தமிழ்)

அனுபல்லவி

அமிழ்தினும் இனிதாம் தமிழ் எங்கள்
ஆவியினும் பெரிதாம் தமிழ் பூவில்
ஆதிமுதல் உயர்வாய்த் தமிழ் மன்னர்
ஆதரித்தே வளர்த்த தமிழ் இன்பத் (தமிழ்)

சரணம்

வல்லமை நல்குவதும் தமிழ் சுக
வாழ்வைப்பெருக்குவதும் தமிழ் சூழும்
அல்லல் தவிர்ப்பதுவும் தமிழ் தூய
அன்பை வளர்ப்பதுவும் தமிழ் நல்லோர்

உள்ளத்தில் ஒளிர்வதும் தமிழ் எம்முள்
ஒற்றுமை பயப்பதும் தமிழ் எங்கள்
செல்வப் பொருளாவதும் தமிழ் செந்
தேனென இனிப்பதும் தமிழ் இன்பத் (தமிழ்)

எங்கள் நாடு

கௌரிமனோகரி ( 18 ) ஜம்பை

பல்லவி

இந்தநாடுதான் எங்கள் செந்தமிழ்நாடு
இன்பவளங்களெல்லாம் எங்கும்நிறைந்தநாடு
(இந்த)

அனுபல்லவி

அந்தநாளிலே சொந்தம்பேசி யிங்கே
வந்தவர்க்கெல்லாம்நல் வாழ்வளித்தநாடு (இந்த)

சரணங்கள்

முல்லைக்குத்தேர்தந்த பாரிவள்ளலும்
முகமலர்ந்துதலைகொள்ள மொழிந்தவள்ளலும்
நெல்லியையௌவைக்குத் தந்தவள்ளலும்
நீலமயிலுக்காடை தந்தவள்ளலும்வாழ்ந்த (து)
(இந்த)

மேருவைச்சென்றுகொண் டறைந்தசோழனும்
மேதினிபுகழ்மனு நீதிச்சோழனும்
வீரராஜரா ஜேந்திரசோழனும்
வெற்றிசேர்கங்கை கொண்டசோழனும்வாழ்ந்த (து)
(இந்த)

ஆரியர்செருக்கை அடக்கிமுடிமேற்கல்லைச்
சேரநாடுகொண்டு தெய்வக்கோயில்கண்ட
தீரன்செந்தமிழ்ச் செல்வனென்னுமெங்கள்
சேரன்செங்குட்டுவன் செங்கோல்செழித்தநாடு
(இந்தநாடு)

## தயங்காதேதமிழா

பைரவி ( 19) திருபுடை

பல்லவி

தமிழின் உயர்வுக்காக
தலைபோவதென்றாலும்நீ
தயங்காதே தமிழா - செந் (தமிழின்)

அனுபல்லவி

தமிழேநமது மூச்சாம்
தமிழேநமது பேச்சாம்
தமிழேநமை யெதிர்ப்போர்
தமைவீழ்த்திடும் வாள்வீச்சாம் (தமிழின்)

சரணம்

தமிழின்உயர்வைக்கண்டார்
தமிழர்அந்தநாளிலே
தரணியெல்லாம்வென்றார்
தனிப்பேர்ஆட்சியும்கண்டார்
தமிழைமறந்தோம்பிறர்
தம்மொழிகற்றோம்அடிமைத்
தளைபூண்டோம்தகர்த்தின்றே
தன்மானம்காப்போமென்றே (தமிழின்)

## தேன்மாரிபோல் பாடினுள்

ரக்ரவாகம் ( 20 ) ஆதி

பல்லவி

பாடினுள் ஓர் தமிழ்ப் பாட்டு - உள்ளம்
பரவசமானேன் நானதைக்கேட்டு (பாடினுள்)

அனுபல்லவி

வாடும் பயிர்களுக்கன்பாலே - முகில்
வார்த்திடும்அமுதத்தேன் மாரியைப்போலே
(பாடினுள்)

சரணங்கள்

பண்டைத்தமிழ் வீரப்பண்பும் - தமிழர்ப்
படைத்திறமும் உயர்ந்த அன்பும் - அவள்
விண்டிடும் போதெல்லாம் எங்கும் - இன்ப
வெள்ளம் உள்ளம் நிறைந்து பொங்கும் - படியவள்
(பாடினுள்)

காவியங்கள் பெருமை சொன்னுள் - உயர்க்
கவிஞர்களின் சிறப்பும் சொன்னுள் - சிற்ப
ஓவியர்கள் திறமும் சொன்னுள் - நமது
உயிரினும் தமிழே உயர்வென்றும் - சொன்னுள்
(பாடினுள்)

ராகமாலிகை (21) ரூபகம்

பல்லவி

சுருட்டி

கொள்ளை கொள்ளுதடி என்னுள்ளத்தைத்
தெள்ளுதமிழ்ராசி, நின்வாய்மொழி (கொள்ளை)

அனுபல்லவி

கிள்ளைமொழிபகர் வள்ளி நின்மோகன
முல்லைச்சிரிப்பினிலே எனதுள்ளமே (கொள்ளை)

சரணங்கள்

ஷண்முகப்பிரியா

மெல்லலைக்காற்றினிலே - மிதக்குமுன்
சொல்லென்செவிபுகுந்தே - எனது
உள்ளம்கவர்வதோடு - புதியதோர்
உணர்வுமுண்டாக்குதடி - நின்வாய்மொழி
(கொள்ளை)

சகானா

சின்னவயதினிலே - எனதன்னைச்
செல்லமொழிகளிலே - கதைபல
சொன்னதெல்லாம்நினைந்தால் - நினதிளம்
சுந்தரரூபமென்கண்முன்வந்தே - மனம்
(கொள்ளை)

மோகனம்

செல்லும்திசைகளெல்லாம் - நினைப்பற்றி
சிந்தனைசெய்பவரும் - நின்உயர்வைச்
சொல்லிவியப்பவரும் - உன்னழகில்
சொக்கித்தன்னைமறப்போர்தனையும் - காணக்
(கொள்ளை)

## தமிழின் தனிச்சிறப்பு

கீரவாணி (22) ஆதி

பல்லவி

அமுதத்தமிழுக்கிணையேது - இந்த
அம்புவியின்மீது நீஓது (அமுத)

அனுபல்லவி

இமயம்முதல்தென் குமரிமுனைவரை
எங்கும்நிறைந்தஇன்பம் தங்கும்துங்கம்மிகுந்த (அமுத)

சரணங்கள்

அமையும்பொருள்நயமும் அழகும்நிறைந்தது
அரிய"ழ"காரத்தனிச் சிறப்பால்உயர்ந்தது
புவியில்ஆழிபோல் ஆதிஅந்தமில்லாதது
புதியபுதியஇன்பம் பொழியத்தகுந்தது (அமுத)

வள்ளுவர்கம்பர்இளங் கோவும்தொல்காப்பியரும்
வள்ளல்களும்ஔவையும் வளர்க்கச்செழித்தது
தெள்ளமுதம்போல்தின்னத் தின்னத்திகட்டாதது
செல்வத்திலெல்லாம்மிக மிகத்தலை சிறந்தது (அமுத)

ஸ்ரீ | தமிழ்க்கொடி வணக்கம்

( 23 )

ஆனந்த பைரவி — திருபுடை

பல்லவி

தோன்றுதுபார்தமிழா நமதன்னையின்
தூயதமிழ்க்கொடி வானிலேஉயர்ந்து (தோன்)

அனுபல்லவி

ஆண்டுபல்லாயிரம் ஆயிரம்ஆயினும்
அன்னைமணிக்கொடி தன்னெழில்குன்றுது (தோன்)

சரணங்கள்

அன்னையின் நுதலோர் சிலேவடிவாகவும்
அன்னை அருள்விழியோர் ஸ்ரீசெல்வடிவாகவும்
அன்னையின்வீரமோர் புலிவடிவாகவும்
அன்னைகண்ணெளியிளங் கதிரவனுகவும் (தோன்)

இந்துமதத்தினர் ஆனாலும் - இஸ்லாம்
ஏசுமதத்தினர்ஆனாலும் - வெறு
எந்தமதத்தினர்ஆனாலும் - ஒன்றுய்
ஏற்றுவணங்கிடும் ஆற்றலுடன் இங்கு (தோன்)

தமிழன் ஒவ்வொருவனும் வணங்கிடவேண்டும்
செந்தமிழ்செழித்திடப்பணி புரிந்திடவேண்டும்
தமிழ்என துயிரிலும் உயர்வெனல்வேண்டும்
தமிழ்உயர்வேதமிழன் உயர்வெனல்வேண்டும்
(தோன்றுது)

யமுனா கல்யாணி (24) மிஸ்ர ஏகம்

பல்லவி

என் தாய்மொழிக்கு இணையேது (என்)

கன்னிகள்

செந்தேன்கற்கண்டோடு கனியுமகசந்திடச்
செய்தென் அறிவோடுயிர் மெய்யைவளர்க்கும்
(என்)

சொல்லும்பொழுதெல்லாம்என் உள்ளம்குளிரும் பிறர்
சொல்லக்கேட்டாலும்துன்பம் எல்லாம்மறக்கும்
(என்)

மூவேந்தரும்அறிவில் முதியோர்களும் முத்தமிழ்ப்
பாவேந்தரும்போற்றிப் பனியும்எழில்மிகும்
(என்)

பசிதாகம்காமம்குரோதம் பகைமையெல்லாம்ஓட்டும்
இசையோடுகலந்துயிர்கட் கின்னமுதூட்டும்
(என்)

காப்பி ( 25) ஆதி

பல்லவி

எங்கும்முழங்குதுபார் தமிழ்முரசு
எங்கள்தமிழ்மொழிக்கு ஈடுஇல்லையென (எங்கும்)

கன்னிகள்

பொங்கும்கடல்சூழ்ப் புவியோர்களெல்லாம் மயங்க
உங்களுக்கும்சுவை தங்கும்தமிழமுதில்
பங்குண்டதனைப் பருகிட வாரீரிங்கென் (று)
(எங்கும்)

கம்பன்இளங்கோ திருவள்ளுவரும்உவந்தே
உம்பரும்வியந்திட ஓதியகவிதைகள்
உண்டிங்கதனை உண்டிடவாரீ ரிங்கென் (று)
(எங்கும்)

## முரசு முழங்குதுபார்

பேகடை ( 26 ) ஆதி

பல்லவி

முரசொலிமுழங்குதுபார் செந்தமிழா
மூவுலகும்வியந்திடவே முத்தமிழ் (முரசு)

அனுபல்லவி

அரசனென்றாலும் ஆண்டியென்றாலும்
அமுதத்தமிழ்க்கலைஞன் அவனேபெரியோனென்று
(முரசு)

சரணம்

அகத்தியமாமுனிவர் அருளியதமிழ் மூன்று
அரசர்களும்பேணி வளர்த்செழுந்தமிழ்
இகத்திலுறும்இன்பங்கள் எதிலும்சிறந்ததென்று
எண்ணிஎண்ணிக்களித்தே உண்ணத்தகும்முத்தமிழ்
(முரசு)

நிலவே நீ சொல்லு

தேஷ் ( ) ஆதி

27

பல்லவி

நீயறியாயோ சொல்லு நிலாவே (நீ)

அனுபல்லவி

தூயசெந்தமிழர் தோள்வலிதனையே (நீ)

சரணங்கள்

தாயறியாத சூலும்உண்டோ
தமிழன் அறியாக் கலைகளும்உண்டோ
வாயறியாத சுவைஉணவுண்டோ
வண்தமிழர்பெருமைக் கீடுமிங்குண்டோ (நீ)

கம்பனின்காவியக் கற்பனைச்சிறப்பும்
கலைக்கிழவி ஒளியின் அறநெறித்தொகுப்பும்
எம்பிரான் இளங்கோ இசைத்தநற்சிலம்பும்
எங்கள் வள்ளுவன் தமிழ் வேதநூல்வகுப்பும் (நீ)

கடல்கடந்தும் வெற்றி கண்டவன்தமிழன்
கங்கையும்கடாரமும் வென்றவன்தமிழன்
திடமுறும்பகைவர் இல் லாமையால்மேருவைச்
செண்டுகொண்டறைந்துச் சிறந்தவன்தமிழன் (நீ)

கௌளை ( 28 ) மிஸ்ர ஏகம்

பல்லவி

சிந்தனை செய்தனையா
செந்தமிழா நீயிதை (சிந்தனை)

அநுபல்லவி

செந்தமிழ்நாட்டினர் முந்தியவாழ்வையும்
இந்தநாள்உன் தமிழ் இனத்தவர்தாழ்வையும்
(சிந்தனை)

சரணங்கள்

அந்தமிகும்தமிழ்அமுதைநீபேணுய்
அன்னியமொழிபயின்று அடிமையாய்ப்போனுய்
சொந்தமதியிழந்து சூனியமானுய்
சோதியை இருளெனத் தூற்றிடலானுய்
(சிந்தனை)

தோள்வலியால்இந்தத் தொல்லுலகெல்லாம்
ஆளும்திறம்படைத்த அருந்தமிழ்நாட்டார்
மாள்வதோஆடு மாடுகள்போலே
மனமிரங்கியோர்க் கணமேனும் நீமண்மேலே
(சிந்தனை)

தமிழன்

சாமா (29)

கண்ணிகள்

எட்டுத்திசைகளிலும் வெற்றிக்கொடி நாட்டி
ஏறுபோல் வாழ்ந்தவன் தமிழன் - இன்று
பட்டினியால் உடல்ஒட்டி உலர்ந்துபோய்
பரதவிக்கின்றவன் தமிழன் (எட்டு)

பட்டுடையும் பருத்திப்பஞ்சுடையும் செய்துப்
பாருக்குக் காட்டியவன் தமிழன் - இன்று
கட்டத்துணியின்றிக் கொட்டும்மழைக்குளிர்க்
காற்றில் திரிந்தலேவோன் தமிழன் (எட்டு)

நீரிறைத்தே உழுது நிலங்களெல்லாம் திருத்தி
நெற்பயிர் விளைப்பவன் தமிழன் - உழைத்தும்
ஓரிரண்டுவேளை உணவுக்கும் வழியின்றி
உடல் உயிர் மெலிகின்றான் தமிழன் (எட்டு)

கல்விக்கடல் என்று சொல்லிப்பிறர் வணங்கக்
கலைவளம் கண்டவன் தமிழன் - இன்று
நல்ல கலைப்பயிற்சியின்றி கையொப்பமிட
நாட்டுகின்றான் விறலைத் தமிழன் (எட்டு)

தன்னலம்பாராமல் அன்னியர்க்கேஅள்ளித்
தந்துமகிழ்ந்தவன் தமிழன் - இன்று
அன்னம்அன்னம்என்று அறைவயிற்றுணவுக்கும்
அல்லற்படுகின்றவன் தமிழன் (எட்டு)

சாவகம், சிங்களம், புட்பகமென்னும்பல
தீவும்வென்றாண்டவன் தமிழன் - இன்று
நாவினால்தன் தமிழ் நாடென்று சொல்லவும்
நாணிநடுங்குகின்றான் தமிழன் (எட்டு)

நெஞ்சம்பதைக்கவில்லையா
புன்னாகவராளி ( ) ஆதி
30

பல்லவி

நெஞ்சம்பதைக்கவில்லையா தமிழ்நாட்டின்
நிலையைநினைக்கும்போது தமிழாஉன் (நெஞ்சம்)

அனுபல்லவி

பஞ்சமும்நோயும் பகைமையும்நமக்குள்
வஞ்சமும்சூழ்ச்சியும் வளர்வதைக்காணஉன்
(நெஞ்சம்)

சரணங்கள்

வகும்பொருகோடி வகுத்துவிட்டார் மத
வாதப்புராணம்பல தொகுத்துவிட்டார் கண்டோர்
நகைக்கும்இழிநிலையைப் புகுத்திவிட்டார்தமிழ்
நாட்டின்பெருமையெல்லாம் அழித்துவிட்டார்
அந்தோ (நெஞ்சம்)

விடியுமுன்எழுந்து மாலைவரை ரத்த
வேர்வைசிந்த உழைத்தும் கூலிபோதாத
கொடுமையினல் தொழிலாளிவருந்தப் பகற்
கொள்ளையடித்துச்சிலர் உள்ளம்களிக்கக்கண்டுன்
(நெஞ்சம்)

பியாக் (31 ) ஆதி

பல்லவி

ஆருக்கும் அடிமையாகாதே மனமே
அன்பின் திறம் அறிந்தோர்க்கின்றி உலகில் நீ
(யாருக்கும்)

அனுபல்லவி

ஊருக்குள்ளே செல்வதில்
உயர்ந்தவன் ஆனாலும்
உண்மை அன்பும் நல்ல
தன்மையும் இல்லாத (யாருக்கும்)

சரணம்

வீண் பகட்டைக்கண்டு நீ மயங்காதே
வியர்த்தமாகப் பொழுதைக்கழிக்காதே
ஊண்வளர்த்திட நீ உயிரை வதைக்காதே
உத்தமர்களின் மனம் நோகச்செய்யாதே
(யாருக்கும்)

சங்கே முழங்கு

ஹேமேந்திர மத்திமம் (32 ) ரூபகம்

பல்லவி

சங்கே நீ முழங்கு வெற்றிச் (சங்)

அனுபல்லவி

பொங்கும் மகிழ்ச்சியுடன் - உன்
சிங்கக்குரல் எடுத்து - உலகம்
எங்கும்விடுதலையின் - புதிய
எழுச்சி எதிரொலிக்க - வெற்றிச் (சங்)

சரணங்கள்

இங்கினிமேல்எவரும்
ஏழையென்பவர் இல்லை - எம்மை
எதிர்த்தழிக்கும்சக்தி - உலகில்
யாருக்குமே இல்லை
எங்கள் இந்திய நாடு - இது
எங்களுக்கே உரிமை - ஆகும்
என்று துணிந்து நின்றே - உயர்க்
குன்றத்தின் மேலிருந்து வெற்றிச்
(சங்)

அடிமையெனும் கொடுமை நம்மை அகன்று
ஒழிந்திடவும் - இங்கு
அன்னியர்கள் செலுத்தி வரும் ஆதிக்கம்
தொலைந்திடவும் - இந்தம்
படிமிசைமாந்தரெல்லாம் சரிநிகர்வாழ்ந்திடவும்
பாதகச்செயல் புரிவோரெல்லாம், பதறிவீழ்ந்
தழிந்திடவும் - வெற்றிச் (சங்)

## 33

அடாணா — ஆதி

பல்லவி

கல்விச்செல்வத்தின் பெருமை தனையெடுத்து
கழறுவதென்பதருமை நலம்தரும் (கல்வி)

அனுபல்லவி

வெல்லும்திறமையும் வீரமும்தியாகமும்
எல்லாநலங்களும் நல்குவதால்உயர்ந்த (கல்வி)

சரணம்

பெருமையும்அருளும் அன்புமுண்டாக்கும்
பேரறிவாளர்கள் கூட்டத்தில்சேர்க்கும்
வறுமையும்மடமையும் பொறாமையும்போக்கும்
மறுமையிலும்இன்ப வாழ்வையுண்டாக்கும் (கல்வி)

## எல்லாம் இன்பம்

கேதாரம் ஆதி

34

பல்லவி

எல்லாம் இங்கே இன்பம், மனமே
இனியவை என்று நீ எண்ணிடில் காண்பது
(எல்லாம்)

அனுபல்லவி

வல்லான்வகுத்த இந்த வையகத்தின் மீது
நல்லோர்கள்விரும்பிடில் இல்லாதவை ஏது
(எல்லாம்)

சரணம்

இல்லறத்துறையிலும் இணையில்லா இன்பம்
இயற்கையின்எழில்மிகும் காட்சியில்இன்பம்
கல்வியிலே நாம் காண்பதும்இன்பம்
கானத்தைக்கேட்பதும் இசைப்பதும்இன்பம்
(எல்லாம்)

## ஆணவங்கொண்டலையாதே

தேசிகத்தோடி | 35 | ஆதி

பல்லவி

ஆணவங் கொண்டலையாதே தோழா நீ
யாரையும் அவமதியாதே வரும்தீதே (ஆணவம்)

அனுபல்லவி

ஆணவம் கொண்டோரெல்லாம் புவிமீது
அழிந்தனரன்றி வாழ்ந்தோர் யாவர் நீஓது
(ஆணவம்)

சரணங்கள்

புத்தரும்ஏசுவும் சித்தர்களும்பிறந்த
புனிதமிகும்நமது பாரதநாட்டார்
நித்தமும்சாதி சமயத்தினுல்பகை
நிகழ்த்துகிருரென்ருல் இகழ்ச்சிசெய்வார் கேட்டார்
(ஆணவம்)

சினம்எதிரியைப்போய்த் தாக்கிடும்முன் அந்தத்
தீஉன்னையேசுடும் ஆதலினுல்உன்
மனத்தில்நிலவும்அன்பு சாந்தம்கருணையினுல்
மாற்றமில்லாமகிழ்ச்சி ஊற்றைப்பெருக்காமல்வீண்
(ஆணவம்)

## மதம்

கல்யாணி ஆதி

35

பல்லவி

மதம்மதம்என மதம்பிடித்தலைந்தால்
சுதந்திரம்எந்தவிதம் நமக்குவரும் (மதம்)

அனுபல்லவி

இதம்புரியும்எளியார் களின்மனம்
என்றும்மகிழ்வடைய நன்றேபுரிவோமினி (மதம்)

சரணம்

தீமைதரும்கொடிய தீண்டாமைப்பேய்மாளவும்
தீரபாரதமக்கள் க்ஷேமமுற்றேவாழவும்
நாம்பிறருக்கடிமை எனும்இழிவகலவும்
ஞானமழிந்துசொந்த மானமிழந்திப்படி (மதம்)

37

செஞ்சுருட்டி | மிஸ்ரஏகம்

கண்ணிகள்

சிந்தையைக்கவர்ந்திடும் என்தமிழ்நாட்டைஇந்த
சென்மத்திற்காண்பேனோ - எந்தன்
அந்தியகாலம்வரை அன்னியர்நாட்டிலேயே
நொந்துயிர்வீழ்வேனோ (சிந்தை)

கங்கைக்காவேரியமுனைக் கோதாவரியோடின்னும்
கணக்கில்லாநதியோடி - எங்கும்
பொங்குஞ்செழுமையும் களிப்புந்தருமென்சென்ம
பூமியைக்காண்பேனோ (சிந்தை)

சிற்பம்ஓவியம்கீதம் காவியமோடுபல
சீர்மிகும்கலைமேவி - இணை
செம்பரியளனது செல்வத்தமிழ்த்தாய்நாட்டைத்
தெரிசித்துமகிழ்வேனோ (சிந்தை)

பொன்னும்நவமணியோ டின்னும்பலபொருள்கள்
பொலிவுறும் தமிழ்நாட்டை - எந்தன்
கண்ணாரக்காணாமல் என்வாழ்நாளை வீணே
கழித்திங்கு மடிவேனோ (சிந்தை)

## இதுவும் ஒரு பிழைப்பா!

தன்யாசி — 38 — ஆதி

பல்லவி

இச்சகம்பேசி லச்சைகெட்டுப்பிழைக்கும்
இந்தப்பிழைப்பும்ஒரு பிழைப்பா (இச்சகம்)

அனுபல்லவி

எச்சரிக்கைசெய்கிறேன் இனியேனும்நீதிருந்து
இன்றேஇலவினிகொடுப்பேன் இசைச்சவுக்கர்ல்மருந்து
(இச்சகம்)

சரணங்கள்

பிச்சைவாங்கியுண்டு பிழைப்பதிலுங்கேடாய்ப்
பிறரைநிந்தித்துஅவ மதித்துக்கோள்புனைந்து
எச்சலிலைக்கு ஏங்கித் திரியும்நாய்போல்பல்லை
இளித்திஇளித்துடலை நெளித்துநெளித்துநின்று
(இச்சகம்)

பலநாள்சிலபேரை ஏமாற்றலாம்ஒரு
சிலநாள்பலபேரை ஏமாற்றலாம்உலகில்
பலநாள்பலரையும் ஏமாற்றமுடியாதென்னும்
பழமொழியைமறந்து இழிவுதரும்வழியில்
(இச்சகம்)

சொன்னசொல்லைமாற்றிச் சொல்லத்துணிகின்றாயே
தோழனிடமும்தரகு பெறநினைக்கின்றாயே
உன்னைநீயேவானளாவப் புகழ்ந்துகொள்ளுகின்றாயே
ஊர்சிரிக்கும்நாளையென்னும் உணர்வும்மறக்கின்றாயே
(இச்சகம்)

கலைக்காகவாழ்வதாய்க் கதையளக்காதே
காசுக்காகக்கலையின் சிறப்பைக்குலைக்காதே
விலைகொடுப்போர்க்குஉன்னை விற்றுக்கெடாதே
வீண்டம்பத்தில்மயங்கி வீழ்ந்துவிடாதே
(இச்சகம்)

## சூழ்ச்சியைவெல்லு

அடாணா 39 ஆதி

பல்லவி

பயமென்னும்பேய் தனைக்கொல்லு இந்தப்
பாரில்உனையெதிர்க்கும் சூழ்ச்சியெல்லாம்வெல்லு
(பயம்)

அனுபல்லவி

கயமைகள் நீக்கிநடு நிலையில் நில்லுபிறர்க்கும்
கடமையைஉணர்த்தநல் வழிகளெல்லாம்சொல்லு
(பயம்)

சரணங்கள்

துயரங்கள்மீண்டும் மீண்டும் உலகில்
தூயவர்களையே தொடருமென்றாலும்
புயலெனும்உள்ளத்தின் வலிமையின்முன்னே
புன்மையெல்லாம்அழிந்து போய்விடும்இன்னே
(பயம்)

கடலலைபோல்தீமை திரண்டு பெரும்
படைகொண்டுவந்தாலும் கலங்காதேமருண்டு
படருலகில்நன்மை தீமையிரண்டு
பகுத்துணர்வாய் உண்மைக்கேஉயர்வுண்டு
(பயம்)

ஸ்ரீரஞ்சனி **பிறவியின் பயன்** ஆதி

## 40

பல்லவி

பிறர் துன்பம்கண்டு இரங்குவதேமனிதப்
பிறவியின் பயனாகும் மனமே (பிறர்)

அனுபல்லவி

அறமெனச்சொல்வது அவனியின்மீதே
ஆருயிர்க்கெல்லாம் அன்புசெய்வதே (பிறர்)

சரணங்கள்

மறந்தும்எவர்க்கும்நீ கேடுசூழாதே - உன்
வலிமைக்குளெளியாரைப் பலியிட்டிடாதே
பிறந்தவர்இறப்பதும் மறப்பதும்உண்டுலகில்
பேரருளாளர்என்றும் இறப்பதில்லைஅதனால்
(பிறர்)

உலகம்அநித்யமென்றோர் நாளும்சொல்லாதே
உள்ளவரை இன்பம் உண்டிதைஎள்ளாதே
புலன்செல்லும்வழியெல்லாம் நீயும் செல்லாதே
புத்திநெறியைஅவ மதித்துத்தள்ளாதே (பிறர்)

ஜோன்புரி இயற்கையின் எழில் ஆதி

## 41

பல்லவி

அன்னை நினதெழிலின் அழகனைத்தும்
அறிந்தே அறைவோர்யார் இங்கே - இயற்கை
(அன்னை)

அனுபல்லவி

பொன்னொளிர் விண்ணிடைப்
பொலிவுறும்பலவிதக்
கண்கவர்வனப்பெல்லாம்
கண்டகம்மகிழ்ந்தேன் என் (அன்னை)

சரணம்

மந்தமாருதமும் மலர்செடி கொடிகளும்
மாபலாகமுகொடு மாதுளைக்கதலியும்
சிந்தையை அள்ளும்நீர் நிலையமும் அருவியும்
செப்பரியபெரியோர்க் கற்பனைக்கும் அடங்கா
(அன்னை)

## இயற்கையின்பம்

கரகரப்பிரியா | 42 | ஆதி

### பல்லவி

எவரேவிருப்பமில்லார் இயற்கையில்
இன்பமில்லையென மறுக்கவல்லார் (எவரே)

### அனுபல்லவி

தவயோகியெனினும் தரித்திரனெனினும்
புவிராஜனெனினும் புலன்படைத்தோர்களில்
(எவரே)

### சரணம்

பண்ணொலிமுழக்கிடும்
பறவைகள் இசையிலும்
பனிமலர்மணமொடு
பரவிடுந்தென்றலிலும்
விண்கதிர்வனப்பிலும்
வெண்ணிலவொளியிலும்
வெள்ளித்திரைகொழிக்கும்
விரிகடல்எழிலிலும் (எவரே)

களிதரும்சோலை

அமீர் கல்யாணி  43  ஆதி

பல்லவி

காணக்காண மனக் களிதரும்சோலை
கற்பனைக்கும்அடங்கா எழில்மிகும்சாலை (காணக்)

அனுபல்லவி

ஆனந்தவாரியில் அமுதம் பொழிவதன்ன
தேனை வண்டுகள் உண்டு திரிந்துதெளிக்கும்காட்சி (காணக்)

சரணம்

நித்தம்நித்தம்நோக்கினும்
புத்தம்புதியசோலை
நிலவிமாந்தர்க்கென்றும்
நிம்மதிதரும் இது
கர்த்தன் தன் இயற்கைக்
கருணைவிலாச
சக்தியைவிளக்குமோர்
சாட்சியதாகநின்று (காணக்)

பூரிகல்யாணி | 44 | ரூபகம்

பல்லவி

எங்கும்இயற்கை இன்னருள்மயமே
இன்பம்தரும்வன எழில்அதிசயமே (எங்கும்)

அனுபல்லவி

தங்கும்குளிர்வனம் சார்வதன்முனமே
சாதிமல்லிகைரோ ஜாமலர்மணமே
தருவதாலிங்கு மாந்தர்மனமே
சாந்தியடைந்திடுமே தினம்தினமே (எங்கும்)

சரணம்

பொங்கும்இன்னிசையோர் புறங்குயிற்பாட
பொன்மயில்கள்தோ கைவிரித்தாட
மென்தளிர்மலரிடை வண்டுகள்நாட
மேனிசிலிர்க்கும்தென் றல்நடமாட (எங்கும்)

## அன்னை

நாதநாமக்கிரியை　　45　　திருபுடை

### பல்லவி

அன்னையைப்போல்நமக்கு நன்மைபுரிவோரிந்த
அவனிதனில்யாவரே மனமேநமது　(அன்னை)

### அநுபல்லவி

முன்னம்கருவில்வைத்து மூளும்துயர்பொறுத்து
உண்ணும்உணவும்ஊணும் உவந்தளித்தேபெற்ற
(அன்னை)

### சரணங்கள்

கண்துயில்கொள்ளாமல் கங்குல்பகல்விழித்துக்
காத்தனள்கண்ணை இமைக் காப்பதுபோல்அவளை
எண்ணிடும்போதெல்லாம் இன்பஊற்றில்தவழும்
இதயம்அதனுல்உடல் எங்கும்சிலிர்க்கும்நமது
(அன்னை)

முலையமுதும்நெஞ்சில் கடலலைபோல்என்றும்
முதிர்ந்தெழும்அன்பமுதும் முத்தமிழின் இனியக்
கலையமுதும்நமக்குக் கருணையுடன் ஊட்டிநாம்
களிப்புறக்கண்டுமனம் களிப்படையும்நமது
(அன்னை)

நாட்டக்குரிஞ்சி 46 ரூபகம்

பல்லவி

காரிருள் அகற்றும் சுதந்திரக்
கதிரெழுந்ததுபார் அடிமைக் (காரிருள்)

அனுபல்லவி

பேரெழில்ஒளிப்பிழம்பாகஇப்
பாரின்பசிப்பிணி யாவும்பரந்திடக் (காரிருள்)

சரணங்கள்

வாரிதித்திரைகள் வாவென்றழைத்திட
வன்னப்பறவைகள் பல்லாண்டிசைத்திட
நாரியார்கூட்டி மெழுகிக்கோலமிட
ஞாலத்துயிர்க்குலம் யாவும்களித்திடக் (காரிருள்)

வீரரெல்லாம்வெற்றிப் போர்முரசார்த்திட
விளைநிலமெங்கனும் பள்ளர்களார்த்திட
சீருயருங்கலைவாணர் வியந்திட
சிந்தைகுளிர்ந்திங்கெல் லோரும்தொழுதிட
(காரிருள்)

47

நவரஸக்கன்னடா ஆதி

பல்லவி

கனநாதனே கௌரிபாலனே
கமழ்ப்பாதமேநான் கருதினேனே (கன)

அநுபல்லவி

மனமகிழ்வோடிம் மகிதலம்போற்றும்
மாட்சிமைபெரும்மீ னாட்சியின்குமாரா (கன)

சரணம்

தினமேசுதின மெனஎண்ணிஉன்னைத்
துதிசெய்தேன்நானே தும்பிமுகத்தோனே
முனமோர்பாரதம் முற்றிலும்அன்பாக
முடித்தஸ்ரீகிருஷ்ண மூர்த்தியின்மருகா (கன)

சங்கராபரணம் 48 ஆதி

பல்லவி

வரம்அருள்வாய் நீயே
வாணிசரஸ்வதியே (வரம்)

அனுபல்லவி

அறவிந்தன் மகிழ் அமுதகல்யாணியே
அகிலங்கள்யாவையும் ஆட்சிசெய்யும்காரணியே (வரம்)

சரணம்

அன்பேகருணை வாரிதியேஎன்
அகமெனும்தாமரை யதில்வளர்ராணியே
கண்பார்சுந்தர கானவிலாசியே
கலைநலங்கள்எல்லாம் தரும்உயிர்நேசியே (வரம்)

## இன்பவாழ்வு வாழவேண்டும்

சிம்மேந்திர மத்திமம் 49 ஆதி

பல்லவி

இன்பவாழ்வுநான் வாழவேண்டினேன்
இறைவா இறைவா இறைவாஎன்றும்பேர் (இன்ப)

அனுபல்லவி

அன்புசூழும்மெய் யருள்ஞானக்கடலே
அவனியெல்லாம்நிறையும் ஆனந்தவிழைவே
(இன்ப)

சரணம்

உன்னருள் தன்னைப் பெருதவன் பொருளால்
உயர்ந்தவன் ஆயினும் தாழ்ந்தவனே உலகில்
அன்னுன் பெருமையை அறியாதவனுயினும்
ஆசைகொண்டேன் நானும் அடிமையாயிருந்து
(இன்ப)

நடனமாடினூர்

மோகனம் — கண்டஜாதி அட தாளம்

## 50

### பல்லவி

தில்லையிலேநடனமாடினூர் எங்கள்தேவாதிதேவன்
திங்களும்மான்மழு கங்கையும்செஞ்சடைத்
திகிரியும் சூலமும் ஆடிடத் (தில்லை)

### அனுபல்லவி

எல்லையில்லாதஇன்பமும் எழிலும்மேவிடவேஎங்கும்
இமையவரும்இருடிகளும் மிகமகிழத்
தகததிங்கிணத்தோ மெனத் (தில்லை)

### சரணம்

கல்லும்கசிந்துருகக் கருணையின்திருவடிவமாகவே
கால்மாறிமாறி காளியோடுகனகமணிச் சபைதனிலே
எல்லாவுயிர்க்குலமும் தழைத்தெல்லாநலமுமுற
ஏகபோகமாய்நாகரீகமாய் ராகதாளபாவமோடு
(தில்லை)

## உன்னை வேண்டினேன்

சரஸ்வதி 51 ஆதி

பல்லவி

உன்னை வேண்டினேன் உமாபதே
என்னையாண்டருள் செய்தயாநிதே (உன்னை)

அனுபல்லவி

அன்னையும்அருள் தந்தையும்நீயே
அகிலங்கள்எல்லாம் நிறைந்திடும்தாயே (உன்னை)

சரணம்

இன்னும்எத்தனை முறையிப்புவிமேல்
இறந்தும்பிறந்தும் உழல்வேன் ஐயா நான்
என்னதான்பிழை அறியாமையால்முன்
இழைத்தேனென்றாலும் எளியேனையாளும் (உன்னை)

## காணவேண்டும்

சாவேரி — ஆதி

## 52

### பல்லவி

ஒருமுறையேனும்நின் தெரிசனம்காணஎன்
உள்ளம்விழைகின்றேன் ஐயா மெய்யா (ஒரு)

### அனுபல்லவி

திருவருளின்செயல் எதுவோஅறியேன்செக
தீசனேஅருட்பிரகாசனே நேசனே (ஒரு)

### சரணம்

பரம்பொருளேஅம் பலத்தினில் ஆடிய
பாதம்அல்லால்கதி யேதும்அறியேன்வேண்டும்
வரங்கள்எல்லாம்தரும் வள்ளலேஅடியவர்
வாக்கிலும்செயலிலும் மனத்திலும்வாழ்வோனே
(ஒரு)

ஈடேறவேண்டும்

கௌரி மனோகரி 53 ஆதி

பல்லவி

எண்ணம் ஈடேறவேண்டும்
இறைவனே உன் திருவருள் பெறவேண்டும் என்
(எண்ணம்)

அனுபல்லவி

மண்ணும் விண்ணும் வாழ்த்தி வணங்கும்
மகபதியே கருணாநிதியே என் (எண்ணம்)

சரணம்

கண்வாய் நாசிமெய் செவிமுதலாம்புலன்கள்
களைத்தலையாமல்ஓர் நிலைநிறுத்திப்பைந்தமிழ்ப்
பண்முழக்கியேஉள்ளம் பரவசமாகிஎன்
பாபம்தொலைந்திடநின் சேவடிதொழஎண்ணும்என்
(எண்ணம்)

சக்ரவாகம் காப்பாற்றி ஆளையா திருபுடை

54

பல்லவி

கடைக்கண்ணால் பார்த்தென்னைக்
காப்பாற்றி ஆளையா (கடைக்)

அனுபல்லவி

படைத்தழிக்கும் ஆதி
பரம்பொருள்உனதருள் நிலவும்திருக் (கடைக்)

சரணம்

விடையேறும்ஞானந்த
வேதாந்தமேசொந்த
விருப்பும்வெறுப்பும்இல்லா
மெய்ச்சபைதனில்இன்ப
நடமாடிக்களிக்கும்மெய்
நாயகனே இந்த
நாயேன்எனக்கும்உந்தன்
நல்லருட்செயல்முந்த (கடைக்)

## 55

இந்தோளம் | ஆதி

பல்லவி

உன் திருவருள் வேண்டும் ஐயா
உலகினில் நான் மீண்டும் பிறவாதிருக்க (உன்)

அனுபல்லவி

பொன்னம்பலத்தினில் பொது நடமாடும்
புண்ணியனே அன்பர் புகழ்ந்து கொண்டாடும் (உன்)

சரணம்

பொன்னணி வேண்டாம் பொருட்குவை வேண்டாம்
புகழ்ச்சியும் வேண்டாம் இகழ்ச்சியும் வேண்டாம்
நன்மையும் வேண்டாம் தீமையும் வேண்டாம்
ஞாயமில்லா இந்த ஞாலமும் வேண்டாம் (உன்)

## பரவசமாகிப்பாடு

மோகனம் 56 ஆதி

பல்லவி

பரம்பொருளின் பதத்தை நாடு உள்ளம்
பரவசமாகிக் கொண்டாடு பண்பாடு (பரம்)

அனுபல்லவி

கரம்குவித்தே ஆனந்தக்
கண்ணீர் மல்கிப்பணிந்துக்
கருணைக்கடலே என்னைக்
காத்தருளென நைந்து (பரம்)

சரணம்

இகசுகபோகமு வாசையைப்போக்கி
எல்லையில்லாதபே ரின்பத்தை நீக்கி
செகத்திற்பிறந்திறக்கும் தீவினை நோக்கி
திருவருட்செயல்தன்னை மனத்தினில்தேக்கி
(பரம்)

## பிழைசெய்தறியேன்

ரதிபதிப்பிரியா 57 ஆதி

### பல்லவி

மனமறிந்தோர் பிழைசெய்தறியேனே என்

(மனம்)

### அநுபல்லவி

தினமும்உந்தன் சேவடிதனையே

மனனம்செய்வதல் லால்இதுவரையே

(மனம்)

### சரணம்

உன்செயலால்அன்றோ உலகினில்வாழும்

உயிர்க்குலம் யாவும் தழைத்திடலாகும்

இன்பவாழ்வே இகமும்பரமும்

எனக்கருள்செய்யும் இறைவனே எந்தன்

(மனம்)

58

மத்திமாவதி ஆதி

பல்லவி

எப்பொழுதோ நான் அறியேன்
இறைவனே நின் திரு வருள் எனக்கருள்வது
(எப்பொழுதோ)

அனுபல்லவி

ஒப்புவமையில்லாத உமையொருபாகா
உத்தமஞானிகள் உயர்த்தும்விவேகா
(எப்பொழுதோ)

சரணம்

இப்பிறவியால்வரும்
இடர்களென்னுலே
எடுத்தியம்பக்கூடுமோ
இத்தரைமேலே
தப்பிதம்பல அறி
யாமையினுலே
நான்புரிந்தாலும்நானுன்
தனையன் அதாலே
(எப்பொழுதோ)

அம்ஸாநந்தி நீவினை செய்தறியேன் ஆதி

## 59

பல்லவி

தினமும் உன் திருவடி சேவையல்லால்ஒரு
தீவினை செய்தறியேன் செகதீசா (தினமும்)

அனுபல்லவி

உனதடியார் மனம் நோகுதல் நன்றோ
உத்தமனே உன் சித்தம் இரங்குதல் என்றோ (தினமும்)

சரணம்

மீளாநரகிலும் கீழான நிலைக்கென்னை
ஆளாக்கினையேஎன் அபயக்குரல்செவியில்
கேளாயோ பிறவித் துயர் நீக்கி
ஆளாயோ என்னை அம்மையப்பாவென்று (தினமும்)

## பிறவாதிருக்கவேண்டும்

சங்கராபரணம் ஆதி

60

பல்லவி

பிறவாதிருக்கவரம் அருள்வாய்உனை
மறவாதவருள் நானும் ஒருவன் ஆதலால் இனி
(பிறவா)

அனுபல்லவி

திருமால் அயனோடருமறையும் காணாது எங்கும்
நிறையும் ஆதிபரம் பொருளே அடியேனினி
(பிறவா)

சரணம்

பிறந்துபிறந்துழன்று வருந்தியுழைப்பதல்லால்
பிரிதோர்சுகமறியாப் பேதையென்பவமெல்லாம்
மறந்தினியாதிலும் கண்திறந்திதயத்திலன்பு
சுரந்துமனமுவந்து நிரந்தரமாயுலகில்
(பிறவா)

## சிந்தனை செய்மனமே

வாகீஸ்வரி

61

ரூபகம்

பல்லவி

தினமொருகண நேரமாகிலும்
சிந்தனைசெய் மனமேநீயனு (தினம்)

அனுபல்லவி

ஜெனனமரணமோடிருவினையு மகற்றிடும்
தீனரட்சகனைசிவசாம்பவனை ஏகம்பரனையனு
(தினம்)

சரணம்

கனவும்நினைவுமாய்எங்கும்
காணும்பொருள்களுமாய்க்
கனலும்புனலுமாய்மற்றும்
காற்றும்மழையுமாய்
அணுவில்அணுவுமாய் இந்த
அகிலஉலகெல்லாம்நிறைந்து
தனியரசியற்றும்
சதாசிவனின்பதாம்புயம்தனைத் (தினம்)

## மதியிழக்காதே மனமே

ஆனந்தபைரவி — ஆதி

62

பல்லவி

நீமதியிழந்து நீடுலகில் வீண்
நிந்தனைக்கென்றும் ஆளாகாதே மனமே
(நீமதி)

அனுபல்லவி

காமம்பொய்கொலைகோள் கொள்ளையிவ்வைந்தும்
காலபாசமெனவே உணர்வாயினி (நீமதி)

சரணம்

நல்லவர்தீயவர் எனும்இருஉரையன்றி
நமனுலகம்போனபின் வேறுளதோ இங்கே
வல்லவன்பதத்தினை வாழ்தியன்போடு
வணங்கிசன்மார்க்க நெறியினிலேநின்று

சந்தம்

கருணைபெருகுங் கடவுளரடியிணையதையே
கருதியொரு மனதொடுவழிபட
பரிதிமேவவிலகிடும் பனிபோல்செய்த
கருமமேயகலுமென அறிவாய்
வறியவர்தம் துயரறகிருபையடைய
தருமமேபுரிய மறுவுலகமதில்
நிகரில்லாத உயர்வடைந்திட
அரிஅரனுடன் அயன்அமரர்
அகமகிழ்வர் அறிவாயினி (நீமதி)

இந்துஸ்தான் பியாக் 63 ஆதி

பல்லவி

தித்திக்கும் ஞானச்சிதம்பரமே
பக்திசெய்வாய்நீ நிதம்நிதமே (தித்)

கண்ணிகள்

சித்திக்கும்இகசுகபோகம் - ஜீவன்
முக்திக்கும்அதுவே மூலமுமாகும் (தித்)

சக்தியும்சிவமும்ஆட - சதா
சர்ஜனர்கூடி மகிழ்ந்துகொண்டாட (தித்)

நித்திரையும்நினைவும்இல்லா - யோக
சித்தர்கள்மனத்துள்ளே நர்த்தனமாடும் (தித்)

பித்தனெனும்பெயர்படைத்தோன் - வேத
தத்துவமெய்ப் பொருளாய்ஒளிர்சித்தன் (தித் )

## வாழ்வுண்டாக்கும்

நீலாம்புரி | 64 | ரூபகம்

பல்லவி

தெய்வத்திருவருள் உண்டு மனமே நீ
தியங்குவதேன் வீணே நமக்குத் (தெய்)

அனுபல்லவி

உய்யும்வழிகளும் உயர்வுமுண்டாக்கும்
வையகமீது நல்ல வாழ்வுமுண்டாக்கும் (தெய்)

சரணம்

பொய்மெய்போலும்
மெய்பொய்போலும்
புலப்படும்முடிவில்
மெய்யேமேலாகும்
ஐயம்கொள்ளாதிருமனமே இந்த
அகிலம்அனைத்தும்ஆண்டருள்செய்யும்
(தெய்)

## இவர்தானோ

தன்யாசி 65 ஆதி

பல்லவி

ஆடியவர் இவர்தானோ தோழிபொன்
அம்பலம்தன்னிலே உம்பர்களிக்கநடம்
(ஆடியவர்)

அநுபல்லவி

ஈடும்எடுப்புமில்லா என் தாய்உமையாளுடன்
கூடிப்பைந்தமிழிசைப் பாடிப்பரவசமாய்
(ஆடியவர்)

சரணங்கள்

நாரதர்வீணை கானமிசைக்க
நந்திதேவர்முழவச்சந்தம்முழக்க
சாரதிநாதனை சதுர்மறைஇசைக்க
சனகாதிமுனிவ ரெல்லாம்கண்டுகளிக்க
(ஆடியவர்)

வேடிக்கையாகவிண்ணும் மண்ணும்இரண்டு
விந்தைவிந்தையெனச் சிந்தைமகிழக்கண்டு
பாடித்துதித்துமனம் பரவசம்கொண்டு
பார்த்திருக்கச்சதங்கை ஆர்த்திடப்பண்டு
(ஆடியவர்)

## கண்டதுண்டோடி என் காதலரை

பைரவி 66 ஆதி

### பல்லவி

கண்டதுண்டோடி என்காதலரை எங்கேனும்
காரிகையே—நீ (கண்ட)

### அநுபல்லவி

அண்டர்படைக்காவலனை ஆதிசக்திதன்பாலனை
தொண்டர்பணியுஞ்சீலனை சோதிவடி வேலவனைக் (கண்ட)

### சரணங்கள்

பண்டையநாள் பழக்கமடி இன்றுநேற்றல்ல
பழகியறிந்த சுகம் மனமும்மறக்குதில்லை
எண்டிசைநோக்கினும் அவ்வெழில்முகம் அல்லாமல்வேறு
ஒன்றையுங்காணாது உள்ளம்உருகித்தவித்ததடி (கண்ட)

கொண்டவர்போல் வந்தென்கோபக் குறிப்பறிந்தே குலவிக்
குலவிமுத்தம்கொடுத்துக் கொடுத்துக்கொஞ்சிஅமுதத்
தண்டமிழ்ப்பேசி யென்னுடல் உயிரில்ஒன்றாய்கலத்த
சர்வபரிபூரணனை சண்முகனென்னுந்தீரனைக் (கண்ட)

# வேண்டாத சம்மந்தம்

நாட்டை 67 ஆதி

பல்லவி

வேண்டாமடி மகளே வேல்முருகன் திரு
மால்மருகன் சம்மந்தம் (வேண்டாமடி)

அனுபல்லவி

நீண்ட நாளாய் நினைந்து உருகுகின்ருயே அந்த
ஆண்டியினுல் நமக்கு ஆவதென்னடி போடி
(வேண்டாமடி)

சரணம்

குலத்தில்தான் அவன் என்ன நம்மிலும் சிறந்தான்
கொடும்பாம் பணிவோன் நெற்றி நெருப்பிலே பிறந்தான்
வலைச்சிவளர்க்கமலை வனங்களில் திரிந்தான்
வனக்குறத்தி வள்ளியை வஞ்சித்து மணந்தான்
(வேண்டாமடி)

சாரங்கா ஆதி

68

பல்லவி

இவனையோ நீமண மாலையிட எண்ணினை
ஈதடாதசெயலே என்மகளே (இவனை)

அனுபல்லவி

புவனமெல்லாம்சுற்றிப் பிச்சையும்எடுப்பான்
புலையன்எச்சலைஉண்டும் உதைபட்டும்களிப்பான்
(இவனை)

சரணங்கள்

சவமெரிந்திடும்சுடு காட்டிடைவசிப்பான்
சாம்பலைப்பூசுவான் பாம்பணிபுனைவான்
தவநிலைதவருத யோகிபோல்நடிப்பான்
தலையிடைஇருபெண்கள்நீரும் இன்பம்குடிப்பான்
(இவனை)

அலியையும்ஈனகுலத் தணங்கையும்மணந்தான்
அடியவர்க்கருள்செய்யும் அறத்தொழில்மறந்தான்
புலியுரிபுனைவதல்லால் எதிர்சிறந்தான்
புவியில்இவன் உனக்கெவ்வகையிலும்பொருந்தான்
(இவனை)

அழைத்துவாடி

சாருகேசி 69 திருபுடை

பல்லவி

சிந்தைகவர்ந்ததிருச் செந்தூர்வடிவேலனை
சென்றே அழைத்து வா போடிஎன் (சிந்தை)

அனுபல்லவி

வந்துஅவர் சென்றிரு வாரமும் ஆச்சே
வருவதாகச்சொன்ன வார்த்தையும் பொய்யாச்சே
(சிந்தை)

சரணம்

பார்த்துப் பார்த்துக் கண்கள்
பூத்துப் போச்சுதடி
பசியும் இல்லை கண்ணுக்கு
உரக்கமும் இல்லையடி
வேர்த்து வேர்த்து உடல்
வெதும்பிக் காய்ந்திடுதடி
விரக வேதனைதன்னை
நான் இனிசகியேனடி (சிந்தை)

## ஏமாந்தேன் தோழி

உசேனி 70 ஜம்பை

பல்லவி

எல்லாம்தெரிந்தும் மதிஇல்லா அபலேபோலே
ஏரகனைநம்பி ஏமாந்தேன்தோழி (எல்லாம்)

அனுபல்லவி

வல்லமைஉள்ளவன் வார்த்தைதவறுவானே
சொல்லிப்பயனென்னடி தோகையேஅவன் குணம்
(எல்லாம்)

சரணம்

இணக்கமும்பிணக்கமும் காதலர்களுக்குள்ளே
இரவும்பகலும்போலே மாறும்இவரைப்போலே
கணக்கில்லா நாட்கள் உயிர்க்காதலியைப்பிரிந்து
கண்ட இடங்களெல்லாம் சென்றுதிரிவாருண்டோ
(எல்லாம்)

வருவாரோ

ஜோன்புரி　　71　　ஆதி

பல்லவி

நாளில் வருவாரோடி - தோழிஎன்
நாயகனுகிய மாயன்மருகன் இந்த (நாளில்)

கன்னிகள்

வேலும்மயிலும்கொண்டு வேலைசூழ்உலகெல்லாம்
ஆளும்பன்னிருகையன் பாலசுப்பிரமணியனின்
(நாளில்)

கள்ளத்தனமாயெந்தன் உள்ளம்கவர்ந்தானடி - அக்
காதலன் ஆருயிர்க்கு ஆதரவாகஇந்த (நாளில்)

இத்தனைநாளும்போல் இன்னும்ஏமாற்ருமல்
சித்தம்இரங்கிஎன்னைச் சேர்ந்தேசுகிப்பதற்கின்
(நாளில்)

கார்த்திகைதீபன் கருணைப்ரதாபன்
கீர்த்திமிகும்இன்ப கீதாவிலாசன் (நாளில்)

கனுக்கண்டேன்தோழி

ராகமாலிகை ஆதி

72

பல்லவி

ஆபேரி

இன்பக்கனு ஒன்று கண்டேன் - என்தோழி
என்னுள்ளம் மகிழ்வுகொண்டேன் என்தோழி
(இன்ப)

அனுபல்லவி

தென்பழனியூரன் சேவற்கொடிக்காரன்
என்னுயிர்க்காதாரன் இரவில்எனை அணைய
(இன்ப)

சரணங்கள்

பன்னிருதோள் அழகும் பரந்தவிழியழகும்
மின்னொளிவேல் அழகும் மேனிஅழகும் காதற்
கன்னல் மொழியழகும் களிற்றின் நடையழகும்
பொன்மயில் தன்னழகும் புன்னகையின் அழகும்
(இன்ப)

பௌளி

தென்றல் மலர்மணத்தை வாரியிறைத்தெங்கும்
திங்களெழுந்ததெந்தன் தேகம்சிலிர்த்த தங்கு
அன்றிற்பேடோடு நடம் ஆடிக்களித்தபோது
ஆறுமுகன் வந்தென்னை அணைந்து சுகித்ததைப்போல்
(இன்ப)

கானடா

முன்னர்யான் கண்டறியா மோகக்கிளர்ச்சிபல
மூண்டது என்னுள்ளத்தில் முற்றும் எனைமறந்தேன்
உன்னைக்கைவிடேன்என்றோர் உறுதிமொழியுந்தந்தார்
ஒப்பிவிட்டேன்நான் இதில்தப்பிதம் ஏதும்உண்டோ
(இன்ப)

வலஜி

அன்புடன்பேசிஎன்னை அணைத்துப்பிடித்திழுத்தான்
அதரம்கனியமுத்தம் அமுதமெனக்கொடுத்தான்
துன்பம்பிறப்பிறப்பு சோர்வுமில்லாதொழித்தான்
தோகையேஇதன்பயன் சொல்லடிநீயறிந்தால்
(இன்ப)

தூதுசொல்லாயோ

தேஷ் — 73 — மிஸ்ர ஏகம்

பல்லவி

மயிலே அவர்பால் நீசென்று தூதுசெல்லாயோ
மனமோர் நிலையில் இல்லையே இனியமட
(மயிலே)

அனுபல்லவி

கைலையில்வாழும் கனகசபேசன்
கழலிணையே துணையாய் நினைந்தேனே என்
(மயிலே)

சரணங்கள்

இரவும்பகலும் என்சிந்தனையில்
நிறைந்திடும்ஆதி பரம்பொருளாகும்
திருநேத்திரதாரியெனும் கருணாகரனும்
அரவாபரணன் அருளேபுரிவான் எழில்சேர்
(மயிலே)

கங்கையும் மங்கள செஞ்சடையும்
துங்கமிகுந்திடும் அம்புலியும்
அங்கையில் சூலமும் மான்மழுவும்
தங்கியசங்கரன் பங்கினில்
இங்கிதமாகவே நீயிதை (மயிலே)

உள்ளம் உருகாதோ

கல்யாணி | 74 | ஐம்பை

பல்லவி

இரவும்பகலும்உம்மை நினைந்துநினைந்துருகி
இளைத்துவிட்டாள்சாமி என்தோழி (இரவும்)

அனுபல்லவி

மரமும்இரும்பும்மண்ணும் மலையும்அவள்நிலைக்கு
உருகும்உமதுதிரு உள்ளம்உருகாதோ
(இரவும்)

சரணம்

கருவிழிகள்மூடித் துயின்றுபலநாள் ஆச்சு
தேன்பாலன்னமும் கசப்பைத்தரும்வேம்பாச்சு
அரும்பும்மென்மலர்மஞ்சமும் அவளுக்குகூர்
முள்ளாச்சு
ஐயேநீர் ஆதரித்தால்ஆச்சு இன்றேல்ஏச்சு
(இரவும்)

ஓம் சுத்த சக்தி

75

கரகரப்பிரியா — சதுர்ஸ்ர ஜாதி அடதாளம்

பல்லவி

ஓம்சுத்தசக்தி நித்யவாழ்வெனக்கு உவந்தருள்வாயே
ஓதும்நான்மறையொடு உலகமும்புகழ்ந்திடும்
உத்தமிநீயே (ஓம்)

அனுபல்லவி

சாம்பவனும்சிவசங்கரனோடு பொற்சபைதனிலே
தாம்தித்தித்தாம்தித்தித் தாமென ஆடிடும்மடமயிலே
(ஓம்)

சரணம்

என்னுடல்ஆவி இதயமுதல்இந்த உலகமெல்லாம்
ஏகமுகமாகி இன்பம்விளைத்திடும்எழில்மதியே
உன்னருளால்நலம் ஓங்கிடவேண்டுமென்
வாழ்க்கையெல்லாம்
உமையவளே தினம் இமையவரும்தொழும்
உயர்நிதியே (ஓம்)

## இன்பவாரிதியே

வசந்தபைரவி 76 ஆதி

பல்லவி

நீயருள் புரிவாயே எங்கும்
நிறைந்திடும் பரம்பொருள் நீயேதாயே
(நீயருள்)

அனுபல்லவி

மாயிருள் களைந்திடுவாயே அரி
மாதவனுரின் சகோதரியே மாயே (நீயருள்)

சரணம்

இகமும்பரமும் சுகமளித்திடும்பேர்
இன்பவாரிதியே எழில்சேர்நிதியே
அகமும்புறமும்உன் நினைவகலாமல்
அமுதத் தமிழ்ப் பண்களில் இசைத்துன்புகழ்பாட
(நீயருள்)

## தயைசெய்வாய் தாயே

கேதார கௌளம் 77 ஆதி

பல்லவி

தயைநீசெய்வாய் தாயேஉன்
தமியேன்நான் இனிஉய்யவே (தயை)

அனுபல்லவி

ஜெயஸ்ரீதர முரஹரிசோதரி
ஜெகமதிலுனதருள் தரவிதுதருவா
ஜெகன்மோகனுங்க மாமணிரமணி (தயை)

சரணம்

இரவிலும்பகலிலும் எனைநீங்காமல்
இருதயம்தனிலே இலங்கிடுவாயே
பரமக்ருபாகரி பாக்யசிங்காரியே
கருணைநிதியே சுபகரமாமதுரித
கமழ்ப்பாத கமலஸ்ரீவிலாசனி (தயை)

சிந்துபைரவி — 78 — ஆதி

பல்லவி

ஆதரவேது மில்லாதெளியோனாய்
அல்லலுற்றேனே அபலைபோல்நானே (ஆதர)

கன்னிகள்

சோதனையோமுன்செய் தீவினைதானோ
துடருமிப்பிறவித் துயர்சகிப்பேனோ
நீதயைபுரிந்திடா விடினுனை நானே
நிச்சயமாய்விடேன் சத்தியம்தானே (ஆதர)

பேதமையால்குற்றம் பலபுரிந்தாலும்
பிறர்உறவால் அவமதித்திருந்தாலும்
வேதனையுற நிந்தித்து இருந்தாலும்
விபரமறியாச்சிருவன் எனையாளும் (ஆதர)

79

மோஹனம் ஆதி

பல்லவி

ராமலிங்கம் ஜோதிராமலிங்கம் வடலூர்
ராமலிங்கம் வள்ளல்ராமலிங்கம் அருள்
(ராமலிங்கம்)

கன்னிகள்

பூமியெங்கணும்புகழும் ராமலிங்கம் - பரி
பூரணமெய்ஞானியென்னும் ராமலிங்கம்
காமக்குரோதம்அறுத்த ராமலிங்கம்
கருணையுருவாகவந்த ராமலிங்கம் எங்கள்
(ராமலிங்கம்)

வள்ளலெனும் பேர்படைத்த ராமலிங்கம் - ஜோதி
வடிவிற்கலந்த எங்கள்ராமலிங்கம்
உள்ளமெல்லாம் அன்புமயம்ராமலிங்கம் அருள்
வெள்ளமழையே பொழிந்த ராமலிங்கம் எங்கள்
(ராமலிங்கம்)

சாதிமதபேதமற்ற ராமலிங்கம் - சதா
சர்ஜனர்வணங்கும் ஜோதிராமலிங்கம்
நீதியின்வடிவமெங்கள் ராமலிங்கம் - எங்கும்
நீக்கமறவேநிறைந்த ராமலிங்கம் எங்கள்
(ராமலிக்கம்)

சற்குரு

ஆபோகி 80 ஆதி

பல்லவி

பெற்றேன் பெற்றேன் பிறவியின் பயனெடு
பெருதற்கரிய சற்குருநாதனை இன்றே
(பெற்றேன்)

அனுபல்லவி

நற்றவங்கள்பல நான்முன் செய்தேனே இந்
நாட்டினர் செய்பெரும் புண்ணியம் தானே
(பெற்றேன்)

சரணம்

உற்றபொன் பொருள்முதல்
ஊண் உடை அணிபணி
பெற்றவர் பெண்டொடு
பெரும்சுகம் யாவும்
அற்றநின்ருேடு என்
ஆசையெல்லாம் பொன்
அம்பலவானனின்
அடியிணைக் காணும்வழி (பெற்றேன்)

வராளி **81** ஆதி

பல்லவி

அழியும்வாழ்க்கைதனில் ஏனோநீவீண்
ஆசைகொண்டாய் மனமேஎன்றோ ஓர்நாள்
(அழியும்)

அனுபல்லவி

இழிவொடுபாபமும் இடர்களும்சூழ்ந்து
இன்னல்தரும் இல்லறத்துயர்க்கடல் வீழ்ந்து
(அழியும்)

சரணம்

ஓடிடும்மனத்தை ஒருவழிப்படுத்தி
உள்ளில்வலமிடமாய் வாசியைநடத்தி
வீடடையாது காற்றடைத்த இத்துருத்தி
விரயமாகதினம் வீண்காலம்கடத்தி
(அழியும்)

## திருவருள் உண்டு

சண்முகப்பிரியா — 82 — ஆதி

பல்லவி

திருவருட் செயல்நமக்குண்டு வீணே நீ
தியங்குவதேன் மனமே (திரு)

அநுபல்லவி

சரவணபவகுக அறுமுகனாகிய
சிவகுருபரன் குமரன் முருகன்தன் (திரு)

சரணம்

இருவினையால்வரும் இடர்களை நீக்கும்
இகபரமிரண்டிலும் இன்பமுண்டாக்கும்
ஒருதனிமுதல்வன் ஒப்புயர்வில்லான்
உலகுயிரனைத்தும்காத் தளித்தளித்திட வல்லான் (திரு)

குமரன்

பிரதாபவராளி　　　　83　　　　ஆதி

பல்லவி

குமரன்குகன் குருபரன் ஆறுமுகன்
குறமா மகள்மருவும்　　　　(குமரன்)

அநுபல்லவி

அமராதியரோடரி அரன் அயனும்
அருமாமறை புகழும்　　　　(குமரன்)

சரணம்

அமலன் அகிலம் அனைத்தும்நிறைந்தொளிர்
விமலன் அடியவர் தொழும்பொற்பாத
கமலன் இகபர நலன்தரும்
நிமலன் கருணைநிதியாகிய　　　　(குமரன்)

சரஸ்வதி 84 ரூபகம்

பல்லவி

அருளேபுரிவாய்த் திருவருளேபுரிவாய்
ஈராறுகையனே குகனே (அருளே)

அனுபல்லவி

கருணாநிதியே இன்பக்
கடலேஅடியேன் எனக்குன் (அருளே)

சரணம்

அருமாமறையும் புகழ்சிவ
பெருமான்தனக்கும் பிரணவப்
பொருள்போதனேயே புரிந்சற்
குருவேஇதுவே தருணம்நின் (அருளே)

பைரவி **85** ரூபகம்

பல்லவி

அருள் நீ புரிந்திடவாவா
அறுமாமுகனே தேவா (அருள்)

அனுபல்லவி

திருமால் மருமகனே வேலா
தேவிசங்கரியாள் திருபாலா (அருள்)

சரணம்

குருவேமறைபுகழ் விசாகா
குமாரசண்முகக்குக விவேகா
வரமருள்வள்ளிக்குஞ்சரி மோகா
வளர்தமிழ்க்கடலே தவயோகா (அருள்)

சந்தம்

உனை உலகினில் கலியுகநிதி
என மொழிந்திடும் மொழி நிஜமெனில்
இனையளவேனும் உனதருளினைத்
துணையென இதுதகிதருவாய்
எதிர்வருவாய்க் கதியருள்வாய்
சுமுகதேக சுராதிபனே
சோபிதஞான விநோதனே
சுபகரமிலகிடும் (அருள்)

## வந்தருள்குகா

சரஸ்வதிமனோகரி **86** ஆதி

### பல்லவி

வந்தருள்குகா வள்ளிநாயகா
வானவர்தொழும் வரதசண்முகா (வந்த)

### அனுபல்லவி

தந்தைதாய்குரு தெய்வம்யாவும்நீயே
தாரில்நின்செயல் அல்லால்வேறில்லையே (வந்த)

### சரணம்

சுந்தராமெய்ஞான சோதிரூபனே
தூயகலைகள்யாவும் தரும்நாதனே
சிந்தையுள்ளிருந்து சிறப்பேயருள்
கந்தனேசெழுங் கமலபூம்பாதனே (வந்த)

## உன்னை நம்பினேன்

ஹேமாவதி 87 ஆதி

பல்லவி

உன்னை நம்பினேனே அநுதினமும்
உமைமகனே குகனே வேலவனே (உன்னை)

அநுபல்லவி

என்ன சொன்னாலும் செவிடன் செவியில் இசை
இசைத்ததைப் போலிருந்தல் வசையல்லவோ நான்
(உன்னை)

சரணம்

நித்தமும் நான் மன சுத்தியுடன் உன்னைப்
பக்தி செய்தும் ஒரு பலனில்லையிதுவரை
பித்தன் மகன் ஆனதால் உனக்குக்கந்தைப்
பித்தம் தலைக்கேறி சித்தம் கலங்கியதோ
(உன்னை)

கல்யாணி — 88 — ஆதி

பல்லவி

குமாரகுருபரன் உமாபதிபுதல்வன்
குகன் முருகன் ஷண்முகன் ஆறுமுகன் (குமார)

அனுபல்லவி

சமானம்இம்மானில மீதெவரவர்க்கு
சதாவுனதடிதாவென பக்தர் துதிக்கும் (குமார)

சரணம்

பாலாபிஷேகயோகன் பக்தர்க்கிரங்கும்தியாகன்
பாவைவள்ளிதன்மோகன் பரமதயாளன்
வேலாயுதவிமல கோலாகலன் அன்பர்
மேலானபதம்புகழ் மாலின்மருகன்யேகன்
(குமார)

## வரவேணும்

காப்பி — 89 — ஜம்பை

பல்லவி

வரவேணும் வடிவேலனே நீ
நல் வரமருள (வர)

அனுபல்லவி

கூறமாது மருவும்சற்
குருவே என்வினை நீக்க (வர)

சரணம்

கருணாகரக்கடவுள்
எனஎண்ணியே உன்னிரு
கழல்தன்னையே நம்பித்
தொழுதேன் அருள்தவழும்
அறுமாமுகத்தரசே
அடியேனென் முறைகேட்டுன்
திருமாமயில் மேலித்தினமே என்முனமே நீ
(வர)

தர்பார் 90 ஆதி

பல்லவி

திருமாமயிலின்மிசை நடமாடிடுங்குமரன்
தேவசேனைக்கதிபன் செகத்தோருய்யத்
(திரு)

அனுபல்லவி

மறைகள்புகழும் ஞானவடிவேல் பெருமையாரும்
அறியாததோயானதை உரைசெய்திடத்தகுமோ
(திரு)

சரணம்

அருள்ஞானக்கடலாய் முன், பொருநாள்
அம்பலவாணர்க்கு, அரியப்பிரணவம்சொன்ன
குருநாதனின் தூய
இருதாள்தொழுதால் இம்மை
மறுமையறும் இதுண்மை
எனப்பாடி துதிப்போர்தம்
இதயத்தைத் தனதாக்கித் (திரு)

## வல்லான்

தோடி 91 ஆதி

பல்லவி

எல்லா நலனும்தர வல்லான் பக்தர்கள் தொழும்
ஏரகமலைவாழும் ஈராறுபுயன் குகன் (எல்லா)

அநுபல்லவி

கல்லாதவன் எனினும் கற்றோரெனினும் உள்ளக்
கருத்தைத்திருத்தி ஒரு நிலைக்குள் நிறுத்தியவர்க்கு (எல்லா)

சரணம்

பொல்லாத வட்சகர்ப் -
பொய்யர்கள் லோபியர் கள்
புல்லறிவோர்க் கொடியக்
கள்ளராகும் இவர்கட்கு
அல்லால் அறம்புரியும்
நல்லார் தமக்கும்ஞானச்
செல்வர்களுக்கும் அன்பர்
செந்தமிழுக்கும் தினம் (எல்லா)

ஜெயந்தவி 92 ஆதி

பல்லவி

கிருபை நீர் செய்ய வேணும் ஷண்முகா
கிருதார்த்தன் நான் ஆகக் (கிருபை)

அனுபல்லவி

திருமாமகள் மருகா வனக்
குறமாதனைக் குமராக்குகா (கிருபை)

சரணம்

நாதரூபனே மெய் ஞானபோதனே
நலம் யாவையும் தரும் பாதனே
வேதமாமறைப் புகழ் நீதனே என்
வினை நீக்கிடும் சற்குரு நாதனே (கிருபை)

13 JUL 1949
MADRAS

இந்துஸ்தான் பியாக் 93 ஆதி

பல்லவி

சரவண பவகுகனே சண்முகனே
சதுர்முகன் அரிஅரன் அமரர்கள்பணிந்திடும்
சரசமனோகரனே சுபகரனே (சரவண)

அனுபல்லவி

சுரர்குலம்தழைக்க அசுரர்குலம்அழித்த
சுடர்வடிவேல்முருகா மால்மருகா
சோபிதமயில்வீரா ஓய்யாரா (சரவண)

சரணம்

நரஜென்மம் அற்றுன் நல்லருள்பெறவும்
நமனொருவன் உண்டெனும் நல்லுணர்வுறவும்
திருமருவும்நினது திருவடிதரவும்
தேவியருடன் எனதெதிரில் நீவரவும்
கிருபைநீசெய்யவேண்டும் நான்வேண்டும்
(சரவண)

சாமா 94 ஆதி

பல்லவி

மாமயிலா முருகா சண்முகா (மாமயிலா)

அனுபல்லவி

மால்மருகா குற மான்மகள் மோகா
மாமறைபுகழும் வேதாந்த வைபோகா
(மாமயிலா)

சரணம்

பாமரனாய்ப்பல நாட்களைக்கழித்தேன்
பக்தர்களின்மனம் புண்படப்பழித்தேன்
காமக்குரோதச்செயல் யாவையும்ஒழித்தேன்
கலியுகதெய்வம் உன்னைக்கண்டு கண்விழித்தேன்
(மாமயிலா)

குறையகற்றவா

உமாபரணம் ஆதி

95

பல்லவி

மனக்குறையகற்றிட மாமயிலேறி நீ
வாவாமுருகா சண்முகா குகா (மனக்)

அநுபல்லவி

வனக்குறவள்ளியாள் மருவும்சுசீலா
வாதுசெய்வதே தகாதிப்போதுகீதம்
ஓதும்எனதெருசி (மனக்)

சரணம்

கனிவாகியஉன்பதமே சதமென்றக்
காலமும்வழிபடும் வேலையிலமர்ந்தேன்
எனக்குன் இன்னருள் வரும்தினமேசுதினமென
எண்ணிஎண்ணி மண்ணிலனுதினம்
புண்ணதாகி வாடுமெனதொருசி (மனக்)

தன்யாசி 96 ரூபகம்

பல்லவி

கந்தா உந்தன் சேயன் நானே
காத்தருள் செய்வாய்சீமானே (கந்தா)

அனுபல்லவி

சந்ததமுந்தன்பதந்தா திருச்
செந்தூர்நகர்தனில் வந்தமர்ந்தோனே
(கந்தா)

சரணம்

சிந்தைமயங்கித் தியங்கிவருந்தினேன்
சேவைகண்டானந்திக்க நான்விரும்பினேன்
சந்தனம்தேனோடு பாலபிஷேகா உன்
சந்நதியானும் அன்றோ

அந்தகாரமே நிறைந்த இக்கொடிய
அவனியைவிட்டு நற்கெதியானடைய
தந்தையேஎனது வாக்கியபடியே
தப்பென்றென்னுமலே ஒப்புக்கொள்வாயே
(கந்தா)

கமாஸ் | 97 | ஆதி

பல்லவி

வினையாவையும் களைந்திடு மறுமுகன் இரு
வேரகன் வேல்முருகன் மால்மருகன் (வினை)

அனுபல்லவி

கனகாபிஷேக தினகர சோபித
கந்தன் பிரபந்தன் ஆனந்தன் உமை மைந்தன் (வினை)

சரணம்

அண்டர்கள் துயரங் கண்டு சென்றவர்க்கு
அபயங்கொடுத்தே போரில் நின்று - கொடிய
வண்டரான சூரபத்மனின் உடலை
வதைத்தே கொன்று வெற்றி கொண்டு - பரங்
குன்றமர்ந்த குமரன் கோதையர் வள்ளிக்
குஞ்சரி மகிழ் மாரன் - ஆலம்
உண்டவர்க்கருள் பரன் அயனின்
அகந்தையகற்றிய தீரன் - நாம்செய் (வினை)

ராகமாலிகை — ஆதி

98

(செஞ்சுருட்டி)

ஆடும்மயில்மேல் அமர்வோனை
ஆனைமுகன் தனக் கிளையோனைப்பணி (ஆடும்)

புன்னாகவராளி

ஈடிணையில்லாத ஈசன்மகனை
இகபரசுகம்தரும் சண்முகனை
வேடுவக்குறமகள் விரும்புமணாளனை
விண்ணோர்படைசெலுத்தும்
பொன்மயில்வேலனை

சதுர்வேதநாதனை மூவினை
தீர்க்கும்பாதனை சதாமுனி
வோர்கள்கீதம் ஓதியேற்றும்
நாதகீதனைப் பணி (ஆடும்)

சிந்து பைரவி

கும்பிடும்பக்தர்தம் குறைதவிர்ப்போனைக்
குன்றுக்குடியமர்க் குகசரவணனைப்பணி
(ஆடும்)

## கருணாகரமுருகா

ராகம்—அரிகாம்போதி 99 ஆதி

### பல்லவி

கருணாகரமுருகா செழுமாமயில்
தனில்ஆரோகணித்து வருவாய் நீ (கருணா)

### அனுபல்லவி

திருமாயோன்மருகா சுரர்அதிபா
திருவேரகம்வளர் பிரணவசொரூபா (கருணா)

### சரணம்

கருவாகியநாள் முதலென்துயர் நீ
களையாததுமேன் கதிர்வேலவனே
குறமாதனையும்சற் குருவேஅடியவர்க்
குணமாகிய மாமல ராசனபதி (கருணா)

காம்போதி நானே உனை வேண்டினேன் திருபுடை

## 100

பல்லவி

நானே உனை வேண்டினேன் நாயகனே குகனே
நமசிவாயன் மகனே முருகோனே (நானே)

அனுபல்லவி

வானவர்க்கோன் மகிழ் மருகா சண்முகா
ஞானனந்தயோகா நங்கை வள்ளிமோகா (நானே)

சரணம்

தினமும் உன் திருவடி தெரிசனமே பெற
தியானம் செய்தேனே தென்பழனி யூரானே
தினகர மணியே தேன்சுவைக் கனியே
தேவாதி தேவனே சிங்கார வேலவனே (நானே)

காணவாருமே

தோடி | ரூபகம்

101

பல்லவி

காணவாருமே கருணாகரனை
அருள்நாயக வரதனை தினம் (காண)

சாந்தங்கள்

கலியுகத்தில் நிலவும் மோனக் கடவுளர்க்குள்
முதன்மையானவனைக் (காண)
கந்தம் கமழ் துளபமணி முகுந்தன்
திருமால் மருகனை தினம் (காண)
கதிர்வேல் திருவருள் மேவிடும்
திருவேரகக் குருதேசிகனைக் (காண)
கமழ் பாலாபிஷேக யோகன்
திகழறுமுகசரவணபவனைக் (காண)
கருதியபடி வரமதுதரும் குருபரனெனும்
திருமகள்மருகனைக் (காண)
கந்தன் கழுகுமலையின் சொந்தன்
இகபரபவபந்தன் பழனிபுரியனைக் (காண)

அனுபல்லவி

ஞானதேசிகநாதன் மெய்ப்போதன்
நங்கையர் வள்ளிக்குஞ்சரிமணாளன்
ஆணவம்கொண்டோர் உயிர்க்கொருகாலன்
அயனையுமொருமுறை சிரசினிலடித்துச்சிறையில்
விடுத்தவனை தினம் (காண)

சரணம்

கானவினைக்கரத்தவர்சொற்படி
(கிராதகனுகக் காவிலிலலைந்தோடி
மானைநாடிமன்றுடி மரமாகி
(மற்றுமோர் செட்டியும்விருத்தனுமாகித்
தேனுடனே தினைமாவையும் வேண்டியத்
திகழ்மாமறைசதுர்வேதமும் புகழாறிருபுயமேவிய
சித்தன்முத்தமிழ்பொழிகர்த்தன் அருணகிரியன்
செப்பனுற்றஒப்பதற்ற அற்புதத்தின்பொற்பதத்தை
தினம் (காண)

## வையகமெல்லாம் வாழ்க!

சக்ரவாகம் ஆதி

102

பல்லவி

வாழ்கவாழ்கஇந்த வையகமெல்லாம்
வாழிய வாழியவே (வாழ்க)

அனுபல்லவி

வாழ்கவாழ்க செந்தமிழ்த்திருநாடு
வாழ்கவாழ்கவென்றே தினம்பாடு (வாழ்க)

சரணங்கள்

வாழ்கவாழ்கசெந் தமிழ்மொழிசெழித்து
வாழ்கவாழ்கதமிழ் வளங்கள்கொழித்து
வாழ்கவாழ்கதமிழ் வளர்ப்பவர்மிகுத்து
வாழ்கவாழ்கதமிழ்க் கவிதைகள்தொகுத்து
(வாழ்க)

கொடியசாதிச்சமயக் குறைகளைத்தவிர்த்து
குள்ளச்சமூகப்பழக்க வழக்கங்களொழித்து
அடிமைத்தனத்தைநம் ஆண்மையால்தகர்த்து
அனைவரும்சுதந்திரப்பேரானந்தத்தில்திளைத்து
(வாழ்க)

# தமிழகத்தின்

# தலைசிறந்த வெளியீடுகள்

வெளிவருகிறது

[illegible]


| பக்கம் | பாட்டு | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 11 | 3 | 1 | தமினிலே | தமிழினிலே |
| 17 | 9 | 10 | துணிவி | துணிவு |
| 21 | 13 | 4 | யிணையுண்டோ | யிணையுண்டோ |
| 23 | 15 | 12 | வள்ளவள் | வல்லவள் |
| 35 | 27 | 8 | ஔயின் | ஔவையின் |
| 68 | 60 | 6 | சுகமடுயாப் பேவை | சுகமறியாப்பேதை |
| 74 | 66 | 8 | கானைது | காணுது |
| 82 | 74 | 6 | கனிதேன் | கனிதேன் |
| 103 | 95 | 5 | எனதெருசிரு | எனதொருசிறு |
| 103 | 95 | 10 | சிரு | சிறு |


கு. சா. கிருஷ்ணமூர்த்தி

எழுதிய அதி அற்புத நூல்கள் கூடிய சீக்கிரம் வெளிவருகிறது.

விபரங்களுக்கு:-

தமிழகம், புதுக்கோட்டை (ஸ்டேட்)

K. R. ராமசாமியின்

# கிருஷ்ணன் நாடக சபா

* அறிவுலகின் அற்புத சிருஷ்டி
* கலையுலகின் கற்பனைக் காட்சி
* நாடகவுலகின் நவீன புரட்சி

—எங்கும் இதுதான் பேச்சு—

திரு. C. N. அண்ணாத்துரை எழுதிய

# ஓர் இரவு

நாடகத்தைப் பார்த்தால் நீங்களும் இப்படிச் சொல்லுவீர்கள்.

-காரைக்கால் அம்மையார்-

-இழந்தகாதல்- -லட்சுமிகாந்தன்-

-மனோஹரா- -கள்வர்தலைவன்-

மற்றும்பல உன்னத நாடகங்கள்

எதிர்பாருங்கள்:— "வேலைக்காரி" சமுகச்சித்திரம்

திரு. C. N. அண்ணாதுரை எழுதியது.

"புகழேந்தி" சரித்திரச்சித்திரம்

திரு. கு. சா. கிருஷ்ணமூர்த்தி எழுதியது.

உரிமையாளர் அனுப்பாளர்
K. R. ராமசாமி T. P. பொன்னுச்சாமி

ஆசிரியர் நிர்வாகி
M. S. முத்துக்கிருஷ்ணன் P. V. நடராஜ்

முகாம்:— தஞ்சை 1-8-46